


# செக்யூரிட்டீஸ் மார்க்கெட் குறித்த கையேடு

முதலீட்டாளர்களின் கண்ணோட்டத்தின் வழியாக புரிந்து கொள்ளுதல்.

भारतीय प्रतिभूति और विनिमय बोर्ड
Securities and Exchange Board of India



BSE INVESTORS' PROTECTION FUND | NSE IPFT | MSE METROPOLITAN STOCK EXCHANGE Investor Protection Fund Trust | NSDL Technology, Trust & Reach IPFT | CDSL INVESTOR PROTECTION FUND TRUST

**பொறுப்புத் துறப்பு:**

இந்த வெளியீட்டில் தவறுகள் அல்லது விடுபடல்கள் இல்லாதிருக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டாலும், இதனைப் பயன்படுத்துவதன் மூலம் யாருக்காவது எந்த வகையிலும் எந்த வழிகளிலும் விளையக்கூடிய எந்த ஒரு பாதிப்பு அல்லது இழப்புக்கு வெளியீட்டாளர்கள் பொறுப்பல்ல

**இணைந்து தயாரித்தவர்கள்:**

- செக்யூரிட்டீஸ் மற்றும் எக்ஸ்சேஞ் போர்ட் ஆஃப் இந்தியா
- பிஎஸ்இ லிமிட்டெட்
- தேசிய செக்யூரிட்டீஸ் டெப்பாசிட்டரிலிமிட்டெட்.
- இந்திய தேசிய பங்குச்சந்தை லிமிட்டெட்
- மத்திய டெப்பாசிட்டரிசர்வீஸஸ் லிமிட்டெட்
- மெட்ரோபாலிட்டன் பங்குச்சந்தை இந்தியா லிமிடெட்

**அச்சிட்டது:**

செபி
தேதி: 23 நவம்பர், 2020

**வாசகர் குறிப்பு:**
செக்யூரிட்டீஸ் மார்க்கெட் பற்றிய அடிப்படைத் தகவல்களைச் சுருக்கமாக உங்களுக்கு அளிக்கும் நோக்கத்தோடு இந்த கையேடு உருவாக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், செபி, பிஎஸ்இ, என்எஸ்இ, எம்எஸ்இ, என்எஸ்டிஎல் மற்றும் சிடிஎஸ்எல் வலைத்தளங்களுக்கு நீங்கள் வருகை தந்து பொருளடக்கங்களைக் காணலாம்.

"இந்த பொருளடக்கங்களில் காணப்படும் தகவல்கள் செக்யூரிட்டீஸ் மார்க்கெட் தொடர்பான கல்வி மற்றும் விழிப்புணர்வு நோக்கங்களுக்காக மட்டுமே வழங்கப்பட்டுள்ளது, மற்றும் அவை இலாப நோக்கில்லாது, பொது மக்களுக்குக் கல்வி மற்றும் விழிப்புணர்வு வழங்க மட்டும் பயன்படுத்தப்படலாம்.

இந்த பொருளடக்கங்களிலிருந்து எந்த ஒரு பகுதியையும் எந்த வடிவத்திலும் மீள் உருவாக்கம் செய்யவோ அல்லது எந்த வகையிலும் நகலெடுக்கவோ அல்லது எந்த ஒரு வட்டு, டேப், பெர்ஃபோரேட் மீடியா அல்லது இதர சேமிப்பு கருவிகளில், செபி அல்லது பங்குச்சந்தை அல்லது டெப்பாசிட்டரீஸ் அனுமதியின்றி, செய்யக் கூடாது.

இந்த பொருளடக்கங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விளையக்கூடிய எந்த ஒரு பாதிப்பு அல்லது இழப்புக்கு, எவருக்கும், எந்த முறையில் ஏற்பட்டாலும், செபி அல்லது பங்குச்சந்தை அல்லது டெப்பாசிட்டரீஸ் பொறுப்பாகாது.

இந்தப் பொருளடக்கத்தில் தவறுகள் அல்லது விடுபடல்களைத் தவிர்க்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. சமீபத்திய சந்தை வளர்ச்சி மற்றும் முயற்சிகளைப் பற்றி அறிய, வாசகர்கள் அவ்வப்போது அறிவிக்கப்படும், சமீபத்திய சட்டங்கள், வழிகாட்டுதல்கள், ஆணைகள் மற்றும் இதர பொருத்தமான ஆவணங்களைக் காணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். ஏதாவது ஆலோசனை அல்லது பின்னூட்டங்களுக்கு, தயவு செய்து எங்களின் visitsebi@sebi.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

| உள்ளடக்கம் | பக்க எண் |
|---|---|
| செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டுக்கு ஒரு அறிமுகம். | |
| 1 செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டுக்கான ஒழுங்குமுறை கட்டமைப்பு | 02 |
| 2 செக்யூரிட்டீஸ் மற்றும் செக்யூரிட்டீஸ் மார்க்கெட் என்றால் என்ன? | 03 |
| 3 முதன்மை சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை | 05 |
| 4 செக்யூரிட்டீஸ் சந்தையில் சந்தை கட்டமைப்பு நிறுவனங்கள் மற்றும் சந்தை இடைத்தரகர்கள் யார்? | 07 |
| முதலீடு செய்வதற்கான அடிப்படை | |
| 5 செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்வதில் உள்ள முக்கிய ஆபத்துக்கள் | 09 |
| 6 ஆபத்துக்களை எவ்வாறு குறைப்பது? | 10 |
| கணக்குத் துவங்கும் நடைமுறை | |
| 7 செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்ய முன்-தேவைகள் | 10 |
| 8 ஒரு கணக்கைத் துவங்குவதற்கான நடைமுறை உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) நடைமுறை | 11 |
| 9 டிமேட் கணக்கின் அடிப்படை சேவைகள் (பிஎஸ்டிஏ) | 12 |
| 10 பகர அதிகாரப் பத்திரம் | 13 |
| 11 நியமனம் | 14 |
| செக்யூரிட்டீஸ் சந்தையில் நான் எவ்வாறு முதலீடு செய்வது? | |
| 12 முதன்மை சந்தை மூலமாக முதலீடு செய்தல் | 14 |
| 13 முதன்மை சந்தையில் முதலீடு செய்வதற்கான நடைமுறைகள் | 15 |
| 14 முடக்கப்பட்ட தொகை ஆதரவோடான விண்ணப்பம் | 16 |
| 15 இரண்டாம் நிலை சந்தை மூலமான முதலீடு | 16 |
| 16 டிரேடிங் நாட்கள் மற்றும் டிரேடிங் & டிரேட் செட்டில்மெண்ட்கள் | 17 |
| 17 ஒப்பந்தக் குறிப்பு | 18 |
| 18 முதலீட்டாளர்களுக்குக் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கை | 19 |
| 19 தொடர் கணக்கைப் பராமரிக்க அதிகாரம் வழங்குதல் | 20 |
| 20 வணிக சரிபார்ப்பு | 20 |
| 21 மார்ஜின் பணம் என்றால் என்ன? | 21 |
| 22 பங்குத்தரகர் மற்றும் டெப்பொசிட்டரியிடமிருந்து கணக்கு அறிக்கை பங்கேற்பாளர்கள் | 21 |
| 23 தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (சிஏஎஸ்) | 22 |
| 24 டெரிவேட்டிவ்ஸ் சந்தை | 22 |
| மியூச்சுவல் ஃபண்ட்ஸ் மற்றும் இடிஎஃப்கள் | |
| 25 மியூச்சுவல் ஃபண்ட்ஸ் | 23 |
| 26 மியூச்சுவல் ஃபண்ட்ஸில் எவ்வாறு முதலீடு செய்வது? | 24 |
| 27 மியூச்சுவல் ஃபண்ட்ஸில் ப்ராடக்ட் லேபலிங் | 24 |
| 28 எக்ஸ்சேஞ் டிரேடட் நிதிகள் (இடிஎஃப்கள்) | 25 |
| செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டில் குறையுற்றோர் குறைதீர்த்தல் | |
| 29 செபி புகார் தீர்வு அமைப்பு (ஸ்கோர்ஸ்) | 25 |
| 30 பங்குச்சந்தை மற்றும் டெப்பாசிட்டரீஸ் முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு | 26 |
| 31 நடுவர் தீர்பாய இயங்குமுறை | 27 |

| | | |
|---|---|---|
| | உரிமை கோரப்படா பங்குகள் / வழங்கப்படாத ஈவுத்தொகை– ஐஇபிஎஃப் பற்றிய தகவல்கள் | 27 |
| | இணைப்பு | |
| 32 | இணைப்பு– I செக்யூரிட்டிஸ் களில் முதலீடு/வணிகம் செய்யும் போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை சந்தை | 28 |
| 33 | இணைப்பு– II முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் | 30 |
| 34 | இணைப்பு– III பதிவு பெறாத முதலீட்டு ஆலோசகர்கள் பற்றிய எச்சரிக்கை | 31 |
| 35 | இணைப்பு– IV ஏஎஸ்பிஏ இல் யூனிஃபைட் பேமெண்ட் இண்டர்ஃபேஸ் (யுபிஐ) | 34 |
| 36 | இணைப்பு– V அருஞ்சொல் | 35 |

**வெளியிட்டவர்கள்**

भारतीय प्रतिभूति और विनिमय बोर्ड
Securities and Exchange Board of India

NSE IPFT

BSE INVESTORS' PROTECTION FUND

MSE METROPOLITAN STOCK EXCHANGE Investor Protection Fund Trust

NSDL Technology, Trust & Reach IPFT

CDSL INVESTOR PROTECTION FUND TRUST

**வாழ்த்துக்கள், வணக்கம்...**

நீங்கள் ஒரு நிறுவனத்தின் பங்குகளிலும், செக்யூரிட்டீஸ் மார்க்கெட் மியூச்சுவல் ஃபண்டுகளிலும் முதலீடு செய்ய விரும்பும் ஒரு முதலீட்டாளரா?

அப்படியானால், செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டில் முதலீடு செய்வதற்கான அடிப்படைகளை நீங்கள் புரிந்து கொள்ள விரும்புவீர்கள்.

இந்தக் கையேடு எந்தவொரு குறிப்பிட்ட முதலீட்டிற்கும் வழிகாட்டி அல்ல, ஆனால் செக்யூரிட்டீஸ் மார்க்கெட் பற்றிய அடிப்படைத் தகவல்களை இது வழங்குகிறது. இந்தக் கையேடு, இந்திய ரிசர்வ் வங்கி (ரிசர்வ் வங்கி), இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஐ), ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (பிஎஃப்ஆர்டிஏ), கார்ப்பரேட் விவகார அமைச்சகம் (எம்சிஏ) போன்ற மற்ற கட்டுப்பாட்டாளர்களின் கட்டமைப்பின் கீழ் உள்ள நிறுவனங்களில் முதலீடு செய்வது தொடர்பானது அல்ல.

# 1

## செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டுக்கான ஒழுங்குமுறைக் கட்டமைப்பு




ஒரு நிறுவனத்தின் பங்குகள், மியூச்சுவல் ஃபண்ட் யூனிட்டுகள், டெரிவேட்டிவ்ஸ் போன்றவற்றை வாங்குவது, விற்பது மற்றும் கையாள்வது மற்றும் பங்குச் சந்தைகள் ஆகியவை செபி சட்டம், 1992 இன் படி செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்சேஞ் போர்டு ஆப் இந்தியா (செபி) (செபி சட்டம்) மற்றும் பல்வேறு செபி விதிமுறைகள் / சுற்றறிக்கைகள் / வழிகாட்டுதல்கள் / வழிமுறைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டவை.

செபி சட்டத்தின் விதிகளின்படி ஏப்ரல் 12, 1992 அன்று செபி நிறுவப்பட்டது. செக்யூரிட்டீஸ் விஷயங்களில் முதலீட்டாளர் நலன்களைப் பாதுகாப்பதும், வளர்ச்சியை மேம்படுத்துவதும், செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டை ஒழுங்குப்படுத்துவதும், அதனுடன் தொடர்புடைய அல்லது மற்ற விஷயங்களுக்காகவும் செபி உருவாக்கப்பட்டது.

தற்போது, "செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டை" நிர்வகிக்கும் நான்கு முக்கிய சட்டங்கள்:

செபி சட்டம், 1992, பின்வருவனவற்றுக்காக செபிக்கு சட்டரீதியான அதிகாரங்களை வழங்குகிறது (i) செக்யூரிட்டீஸில் முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாத்தல், (ii) செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டின் வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் (iii) செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டை ஒழுங்குபடுத்துதல்.

நிறுவனங்கள் சட்டம், 2013, செக்யூரிட்டீஸை வழங்குதல், ஒதுக்கீடு மற்றும் பரிமாற்றம், மற்றும் செக்யூரிட்டீஸின் பொது வழங்கல் தொடர்புடைய சிக்கல்கள் ஆகியவற்றுக்கான விதிமுறைகளை வழங்குகிறது;

செக்யூரிட்டீஸ் காண்ட்ராக்ட்ஸ் (ஒழுங்குமுறை) சட்டம், 1956, பங்குச் சந்தையில் செக்யூரிட்டீஸ் பரிவர்த்தனைகளை அங்கீகரித்து ஒழுங்குபடுத்துகிறது.

தி டெபாசிட்டரீஸ் சட்டம் 1996, டிமெட்டீரியல் செய்யப்பட்ட (டிமேட்) பங்குகளின் உரிமையை மின்னணு முறையில் பராமரித்து, மாற்றுவதற்கு வழி வகுக்கிறது.



# 2

### செக்யூரிட்டீஸ் மற்றும் செக்யூரிட்டீஸ் மார்க்கெட் என்றால் என்ன?



ஈக்விட்டி பங்குகள் அல்லது பொதுவாக பங்குகள் என அழைக்கப்படுபவை, ஒரு நிறுவனத்தில் ஒருவருக்கு உரித்தான பங்கைக் குறிக்கும். ஒரு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்யும் ஒரு முதலீட்டாளர் பங்குதாரர் என்று அழைக்கப்படுகிறார், மேலும் நிறுவனத்தின் லாபத்திலிருந்து டிவிடெண்ட் போன்ற அனைத்து கார்ப்பரேட் சலுகைகளையும் பெற அவருக்கு உரிமை உண்டு. நிறுவனத்தின் பொதுக் கூட்டத்தில் பங்கேற்று நிறுவனத்தின் முடிவெடுக்கும் செயல்முறை தொடர்பாக வாக்களிக்கும் உரிமையைப் பெறவும் முதலீட்டாளருக்கு உரிமை உண்டு.




டெப்ட் செக்யூரிட்டீஸ் என்பவை ஒரு முதலீட்டாளரிடமிருந்து நிறுவனம் / ஸ்தாபனம் கடனாகப் பெற்ற பணமாகும் மற்றும் அது முதலீட்டாளருக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். டெப்ட் செக்யூரிட்டீஸ் டிபென்சர்ஸ் அல்லது பாண்ட்ஸ் என்றும் அழைக்கப்படுகின்றன. டெப்ட் செக்யூரிட்டீஸில் முதலீடு செய்யும் ஒரு முதலீட்டாளருக்கு வட்டி பெறவும் மற்றும் அசலை திரும்பப் பெறவும் (அதாவது முதலீடு செய்யப்பட்ட பணம்) உரிமை உண்டு. டெப்ட் செக்யூரிட்டீஸ் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கப்படுகின்றன., அதன் முடிவில் டெப்ட் செக்யூரிட்டீஸ் வழங்குபவர் அவற்றை மீட்டெடுக்கலாம். டெப்ட் செக்யூரிட்டீஸ் பாதுகாக்கப்பட்டவையாக (பிணை வாயிலாக) அல்லது பாதுகாப்பற்றவையாக இருக்கலாம்.



டெரிவேட்டிவ்ஸ் என்பவை பங்குகள், டெப்ட் செக்யூரிட்டீஸ், கமாடிட்டீஸ் போன்ற வேறொரு சொத்தின் மதிப்பைப் பொறுத்து இருக்கும் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் ஆகும். பரிமாற்ற வர்த்தக டெரிவேடிவ்ஸின் முக்கிய வகைகள் ஃப்யூசர்ஸ் மற்றும் ஆப்ஷன்ஸ் ஆகும்.



மியூச்சுவல் ஃபண்டுகள் என்பது பல முதலீட்டாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஃபைனான்ஷியல் இன்ஸ்ட்ருமென்ட் ஆகும். இந்த நிதிகள் / மியூச்சுவல் ஃபண்டுகள், பின்னர், பங்குகள், பத்திரங்கள், மணி மார்க்கெட் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் மற்றும் பிற சொத்துக்கள் போன்ற செக்யூரிட்டீஸில் முதலீடு செய்கின்றன.

செக்யூரிட்டீஸ் மார்க்கெட் என்பது முதலீட்டாளர்களுக்கு (பொதுமக்கள்) பங்குகள், டெப்ட் செக்யூரிட்டீஸ், டெரிவேட்டிவ்ஸ், மியூச்சுவல் ஃபண்டுகள் போன்ற செக்யூரிட்டீஸை வழங்குவதன் மூலம் நிறுவனங்கள் நிதி திரட்டக்கூடிய இடமாகும், மேலும் முதலீட்டாளர்கள் பல்வேறு பத்திரங்களை (பங்குகள்,) வாங்க அல்லது விற்கக்கூடிய இடமாகும். பங்குகள் (அல்லது பத்திரங்கள்) பொதுமக்களுக்கு வழங்கப்பட்டவுடன், நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட பங்குச் சந்தைகளில் பங்குகளை (அல்லது செக்யூரிட்டீஸை) பட்டியலிட வேண்டும். செக்யூரிட்டீஸ் மார்க்கெட் என்பது மூலதன மார்க்கெட்டின் ஒரு பகுதியாகும்.



செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டின் முதன்மை செயல்பாடு முதலீட்டாளர்களிடமிருந்து பெற்ற சேமிப்புகளை, நிதி தேவைப்படுபவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதாகும். நிதி தேவைப்படும் நிறுவனங்கள் / ஸ்தாபனங்களின் செக்யூரிட்டீஸ்களில் முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் போது இது செய்யப்படுகிறது. முதலீட்டாளர்கள் வட்டி, டிவிடெண்ட், கேப்பிட்டல் அப்ரிசியேஷன், போனஸ் போன்ற சலுகைகளைப் பெற உரிமையுள்ளவர்கள். இத்தகைய முதலீடுகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றன.




செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டில் ஒன்றோடொன்று தொடர்புடைய மற்றும் பிரிக்க முடியாத இரண்டு பிரிவுகள் உள்ளன. அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

செக்யூரிட்டீஸ் மார்க்கெட்

- 01 பிரைமரி மார்க்கெட்:
  - 01 குறிக்கோள்: நிதியை கைவரப் பெறுதல்
  - 02 ஆரம்ப பொது வெளியீடு, அதாவது ஐபிஓ மூலம் புதிய செக்யூரிட்டீஸை வெளியிடுவதையும் உள்ளடக்குகிறது.
- 02 செக்கண்டரி மார்க்கெட்
  - 01 குறிக்கோள்: மூலதன வளர்ச்சி
  - 02 பொதுமக்களுக்கு ஆஃபர் செய்யப்பட்ட செக்யூரீட்டீஸின் மேற்கொண்ட வணிகத்தை உள்ளடக்குகிறது.

# 3

## பிரைமரி மார்க்கெட் மற்றும் செகண்டரி மார்க்கெட்




பிரைமரி மார்க்கெட் நியூ இஷ்யூஸ் மார்க்கெட் என்றும் இந்த மார்க்கெட் அழைக்கப்படுகிறது. புதிய செக்யூரிட்டீஸை (பங்குகள், டிபென்சர்ஸ், பாண்டுகள் போன்றவை) வழங்குவதன் மூலம் நிறுவனம் / ஸ்தாபனங்கள் பொதுமக்களிடமிருந்து நிதி (மூலதனம்) திரட்டுகிறது.

செக்யூரிட்டீஸை வழங்குபவர்களில் இரண்டு முக்கிய வகையினர் உள்ளனர்:

- முக்கியமாக ஈக்விட்டி இன்ஸ்ட்ருமென்ட்ஸ் (பங்குகள்) மற்றும் கடன் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் (பாண்டுகள், டிபென்சர்ஸ் போன்றவை) ஆகியவற்றை வழங்கும் கார்ப்பரேட் அமைப்புகள் (நிறுவனங்கள்)

- கடன் பத்திரங்களை (தேதியிட்ட பத்திரங்கள் மற்றும் கருவூல பில்கள்) வழங்கும் அரசாங்கம் (மத்திய மற்றும் மாநிலம்).

பிரைமரி மார்க்கெட்டில் வழங்கப்படுபவற்றின் வகைகள்:

### 1 பொது வெளியீடு



செக்யூரிட்டீஸ் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுகின்றன. மேலும் யார் வேண்டுமானாலும் அவற்றை வாங்கலாம். ஈக்விட்டி பங்குகளின் பொது வெளியீடு பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்:

#### i. ஆரம்ப பொது வெளியீடு (ஐபிஓ):

ஒரு நிறுவனத்தின் பங்குகளின் முதல் பொது வெளியீடு. ஒரு ஐபிஓ பின்வரும் வடிவங்களில் இருக்கலாம்:

- பங்குகளின் புதிய வெளியீடு பொது முதலீட்டாளர்களுக்கு நிறுவனம் புதிய பங்குகளை வழங்குதல். இந்த வகையான வெளியீட்டில், எந்த நிறுவனம் ஒரு நோக்கத்திற்காக வெளியிட்டதோ முதலீட்டாளர்களின் நிதி அந்த நிறுவனத்திற்குச் செல்லும்.

- விற்பனைக்கான வெளியீடு தற்போதுள்ள பங்குதாரர்களான ஸ்பான்ஸர்கள் அல்லது நிதி நிறுவனங்கள் அல்லது வேறு எந்த நபரும் தங்கள் பங்குகளை பொதுமக்களுக்கு வழங்குதல். இந்த வகையான வெளியீட்டில், முதலீட்டாளர்களின் நிதி அந்த பங்குகளை விற்பவர்களுக்குச் செல்லும், நிறுவனத்திற்கு அல்ல.

ii. பின்தொடர்பொது வெளியீடு :

கடந்த காலத்தில் ஏற்கனவே ஒரு IPOவை வெளியிட்டு, தற்போது புதிய செக்யூரிட்டீஸை - பொதுமக்களுக்கு வெளியிடும் ஒரு வெளியீட்டாளர் / நிறுவனம்.

## 2 முன்னுரிமை



இந்த வெளியீட்டில், ஸ்பான்ஸர்கள், திட்டமிட்ட முதலீட்டாளர்கள், ஊழியர்கள் போன்ற அடையாளம் காணப்பட்ட முதலீட்டாளர்களுக்கு செக்யூரிட்டீஸ் வழங்கப்படுகின்றன.

## 3 உரிமைகள்



ஒரு நிறுவனம் புதிதாக வெளியிடப்படும் பங்குகளை வாங்கும் உரிமையை தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு அவர்களின் தற்போதைய பங்குகளின் விகிதத்தில் வழங்கும்போது, இது உரிமைகள் வெளியீடு என்று அழைக்கப்படுகிறது.

## 4 போனஸ் வழங்கல்



ஒருநிறுவனத்தில் தற்போதுள்ள பங்குதாரர்களுக்கு அவர்கள் வசமுள்ள பங்குகளின் விகிதத்துக்கு ஏற்ப கூடுதல் கட்டணம் ஏதுமின்றி கூடுதல் பங்குகள் தரப்பட்டால், அது போனஸ் வழங்கல் என்று அழைக்கப்படும்.

பொதுமக்களிடமிருந்து நிதி திரட்ட விரும்பும் நிறுவனங்கள், ஒரு வழங்கல் ஆவணத்தை செபியில் தாக்கல் செய்ய வேண்டும், அது ரெட்ஹெர்ரிங் வரைவு தகவல் குறிப்பு அல்லது வரைவு தகவல் குறிப்பு என்று அழைக்கப்படும். நிறுவனத்தின் வரலாறு, நிறுவனம் துவங்குபவர்கள் பற்றிய தகவல்கள், வணிக முறை, நிறுவனத்தின் நிதி வரலாறு, அந்த வணிகத்திலுள்ள ஆபத்துக்கள், நிதி திரட்டுவதன் நோக்கம், வழங்கப்படுவதற்கான நிபந்தனைகள், நிறுவனத்தின் பங்குகளை வாங்க தகவல் தெரிவிக்கப்பட்ட முடிவுகளை எடுக்க முதலீட்டாளர்களுக்கு உதவும் இவை போன்ற மேலும் இதர தகவல்கள் தகவல் குறிப்பில் அடங்கும். முதன்மை சந்தையில் வெளியிடப்பட்ட செக்யூரிட்டீஸ்கள் அங்கீகரிக்கப்பட்ட பங்குச்சந்தையில் வெளியீடு முடிவடையும் நாளிலிருந்து ஆறு (06) வேலை நாட்களுக்குள் பட்டியலிடப்பட்டிருக்கும். அதன் பிறகு பங்குகள் அங்கீகரிக்கப்பட்ட பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டு அங்கு பங்குகளின் அடுத்த வணிக நடவடிக்கைகள் நடைபெறும்.

நிறுவனத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள், முதலீட்டாரின் டிமேட் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு, அது, செபி பதிவு பெற்ற டெப்பாசிட்டரி வழியாக ஒரு டெப்பாசிட்டரியில் பராமரிக்கப்படும். பங்கேற்பாளர் (டிபி) ஒரு முதலீட்டாளர் பங்குகளை செபி பதிவு பெற்ற பங்குத் தரகர் மூலமாக பங்குச்சந்தைகளில் விற்று, பணம் பெறலாம்.

இரண்டாம் நிலை சந்தை : முதலாம் சந்தையில் செக்யூரிட்டீஸ்கள் வழங்கப்பட்ட உடனே, அவைகள் பங்குச்சந்தையில் பட்டியலிடப்படும், மற்றும் முதலீட்டாளர்கள் அந்த பட்டியலிடப்பட்ட செக்யூரிட்டீஸ்களை பங்குச்சந்தை வழியாக வாங்கவோ அல்லது விற்கவோ செய்யலாம். பங்குச்சந்தைகள் இரண்டு முக்கிய பிரிவுகளை கொண்டுள்ளன.- கேஷ் மார்க்கெட் பிரிவு மற்றும் டெரிவேட்டிவ்ஸ் மார்க்கெட் பிரிவு.



# 4

## செக்யூரிட்டீஸ் சந்தையில் சந்தை கட்டமைப்பு நிறுவனங்கள் மற்றும் சந்தை இடைத்தரகர்கள் யார்?

சந்தை கட்டமைப்பு நிறுவனங்கள்.: செக்யூரிட்டீஸ் சந்தையில் பரிமாற்றங்களை செய்யும் (அதாவது, செக்யூரிட்டீஸ் வழங்கல், வாங்கல் மற்றும் விற்பனை செய்தல்) வசதிக்காக பங்குச்சந்தை, டெப்பாசிட்டரீஸ் மற்றும் தீர்வு கூட்டுநிறுவனங்கள் ஒரு கட்டமைப்பை வழங்கியிருக்கின்றன: இந்த நிறுவனங்கள் சந்தை கட்டமைப்பு நிறுவனங்கள் என்று அழைக்கப்படுகின்றன. (எம்ஐஐ-கள்) செபியில் பதிவு செய்யப்பட சந்தை கட்டமைப்பு நிறுவனங்களின் (எம்ஐஐ-கள்) பட்டியல் இந்த இணைப்பில் உள்ளது: https://www.sebi.gov.in/intermediaries.html.



பங்குச் சந்தையானது அவர்களது பதிவு பெற்ற பங்குத் தரகர்கள் மூலம் சந்தை நிர்ணயிக்கும் விலைகளில், ஒரு நியாயமான வழியில் செக்யூரிட்டீஸ்களை வாங்கவும் விற்கவும், நாடு தழுவிய அளவில் கணினிமயமாக்கப்பட்ட திரையை அடிப்படையாக கொண்ட வணிக தளத்தை வழங்குகிறது. இந்தியாவில் செபி அங்கீகாரம் பெற்ற பங்குச் சந்தைகளின் பட்டியல் இந்த இணைப்பில் உள்ளது: https://www.sebi.gov.in/stock-exchanges.html.



நாடு தழுவிய முக்கியமான பங்குச்சந்தைகள் பிஎஸ்இ லிமிட்டெட் (பிஎஸ்இ), நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட் (என்எஸ்இ) மற்றும் மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்

தீர்வுக் கூட்டுநிறுவனங்கள்: தீர்வுக் கூட்டுநிறுவனங்களின் முக்கிய செயல்பாடு பங்குச் சந்தைகளில் மேற்கொள்ளப்பட்ட வணிக பரிமாற்றங்களின் தீர்வுக்கு உத்தரவாதமளிப்பதாகும். வேறு வகையில் சொல்வதென்றால், வாங்கும் ஒவ்வொரு நபரும் அவர் வாங்கும் செக்யூரிட்டீஸை பெறுவதையும் , செக்யூரிட்டீஸ்களை விற்பனை செய்யும் ஒவ்வொருவரும் அவர் விற்ற செக்யூரிட்டிஸுக்கான பணத்தை பெறுவதையும் தீர்வு கூட்டுநிறுவனங்கள் உறுதி செய்கின்றன.

NSE Clearing
Metropolitan Clear
Indian Clearing Corporation Limited ICCL Reliability builds relationships

டெப்பாசிட்டரீஸ்: முதலீட்டாளர்களின் செக்யூரிட்டீஸ்களை மின்பொருளாக்கம் செய்து/ மின்னணுவியல் வடிவத்தில் வைத்திருந்து முதலீட்டாளர்களுக்கு டிமேட் சேவைகளை அவர்களது டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் (டிபி) மூலமாக அளிக்கும் நிறுவனங்கள் தான் டெப்பாசிட்டரீஸ் எனபவை. நமது நாட்டில் இரு டெப்பாசிட்டரிகள் இருக்கின்றன, அவை நேஷனல் செக்யூரிட்டீஸ் டெப்பாசிட்டரி லிமிட்டெட் (என்எஸ்டிஎல்) மற்றும் சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் (சிடிஎஸ்எல்) ஒவ்வொரு டெப்பாசிட்டரியின் கீழும், பதிவு பெற்ற டெபாசிட்டரி பார்ட்டிசிப்பன்ட்கள் (டிபிக்கள்) (வங்கி கிளைகள் போல) இருக்கின்றன. அவை ஒரு டிமேட் கணக்கைத் துவங்க, அதைப் பராமரிக்க, பங்குகளை மின்பொருளாக்கம் செய்வது போன்ற பல்வேறு சேவைகளை முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றன.



பிரைமரி மற்றும் செகண்டரி மார்க்கெட்டுகள் சிறப்பாக செயல்பட மார்க்கெட் இன்டர்மீடியரீஸ்] முக்கியமான பங்கேற்பாளர்களாக விளங்குகிறார்கள். செக்யூரிட்டீஸ்களை வாங்க மற்றும் விற்க, செக்யூரிட்டீஸ்களை கையாள மற்றும் செக்யூரிட்டீஸ் வணிகத்திற்கு பொருத்தமான தகவல்களை அளிக்க போன்றவற்றிற்கான ஆணைகளை நிறைவேற்றும் நடைமுறைகளுக்கு இந்த மார்க்கெட் இன்டர்மீடியரீஸ் ஆதரவாக இருப்பார்கள். பங்குத் தரகர்கள், டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள், வணிக வங்கிகள், பங்கு மற்றும் மாற்றித்தரும் முகவர்கள், பதிவாளர்கள் போன்றவர்கள் சில முக்கியமான இன்டெர்மீடியர்கள் ஆவார்கள். அவ்வாறான அனைத்து இன்டெர்மீடியர்களும் செபியில் பதிவு செய்யப்பட்டவர்கள். மற்றும் முதலீட்டாளர்களை பாதுகாப்பதற்காக முறைப்படுத்தப்பட்ட விதிகளுக்கு இணங்கி அவர்கள் செயல்பட வேண்டும். செபியினால் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கெட் இன்டெர்மீடியரீசின் ஒரு பட்டியலை இந்த இணைப்பில் காணலாம்: https://www.sebi.gov.in.

## முதலீடு செய்வதற்கான அடிப்படை


செக்யூரிட்டீஸ் மார்க்கெட்டில் நீங்கள் முதலீடு செய்யத் தொடங்கும் முன், உங்களது முதலீட்டு இலக்குகள், குறிக்கோள்கள், ஆபத்து நாட்டம் (ஆபத்தை எந்த அளவு எடுத்துக்கொள்ள நீங்கள் விரும்புகிறீர்கள்) ஆகியவற்றை புரிந்து, அடையாளம் கண்டு கொள்வது மிக அவசியம். ஒவ்வொரு முதலீட்டு முடிவும் உங்களது தேவைகள் மற்றும் அத்தியாவசியத்தை பிரதிபலிக்க வேண்டும் மற்றும் அவை உங்கள் விருப்பத்திற்கு ஏற்றாற் போல் இருக்க வேண்டும். உதாரணமாக, ஒரு சீரான வருமானத்தை அளிக்கக்கூடிய திட்டத்தில் முதலீடு செய்ய நீங்கள் விரும்புகிறீர்களா அல்லது உங்களுக்கு அதிக வருமானத்தை அளிக்கக்கூடிய ஒரு சிறிய ஆபத்துடன் கூடிய திட்டங்களில் முதலீடு செய்ய விரும்புகிறீர்களா? ஒவ்வொரு முதலீடும் அந்த முதலீட்டின் மதிப்போடு கூடிய மாறுதலுக்கான ஆபத்தைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, தானியங்கி வாகன உற்பத்தித் துறையின் பங்குகளில் முதலீடு செய்வது, அந்த தானியங்கி வாகன தயாரிப்பு துறையில் உள்ள ஆபத்துக்களுடன் இணைந்தே இருக்கும் (விற்பனை அதிகரிக்கலாம் அல்லது குறையலாம் அல்லது ஒரு பிராண்டு வாகனங்கள் வேறொரு பிராண்டு வாகனங்களை விட அதிகமாக விற்பனையாகலாம் போன்றவை.)



உங்களது இலக்குகளை நீங்கள் முடிவு செய்து, ஆபத்தை எதிர் கொள்வதற்கான உங்கள் விருப்பத்தை அடையாளம் கண்டு விட்டால், நீங்கள் முதலீடு செய்ய விரும்பும் தொகையையும், நீங்கள் முதலீடு செய்ய விரும்பும் கால அளவையும் தயவுசெய்து முடிவு செய்து கொள்ளுங்கள். ஆபத்தை எதிர்கொள்ளும் திறன் முதலீட்டாளருக்கு முதலீட்டாளர் மாறுபடும் மற்றும் முதலீட்டாளரின் இலக்குகள் மற்றும் வயது போன்றவற்றைச் சார்ந்தும் இருக்கும்.



முதலீட்டாளர்கள் தங்களது உரிமைகள், பொறுப்புகள், முதலீடு தொடர்பாக என்ன செய்ய வேண்டும் மற்றும் செய்யக்கூடாது என்பவை பற்றியும் மிகத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இந்த ஆவணங்கள் செபி, பங்குச்சந்தை மற்றும் டெப்பாசிட்டரீஸ் வலைத்தளங்களில் உள்ளது. செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்வது தொடர்பாக என்ன செய்ய வேண்டும் மற்றும் செய்யக்கூடாது என்பவை குறித்த தகவல்கள் இந்த கையேட்டின் இணைப்பு-I ஆக இணைக்கப்பட்டும் இருக்கிறது. கூடுதலாக, முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவையும் இணைப்பு-II ஆக இந்தக் கையேட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.




ஒரு நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு முன் தகவலறிந்த முடிவுகளை முதலீட்டாளர்கள் மேற்கொள்ள வேண்டும். நிறுவனம் சம்பந்தப்பட்ட மற்றும் நிறுவனம் தொடங்குபவர்கள் குறித்த வெளியீடுகள், திட்ட விவரங்கள், நிதி விவரங்கள் போன்ற நிறுவனம் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் அவர்கள் கவனமாகப் படிக்க வேண்டும். இந்த தகவல்களை பங்குச்சந்தை வலைத்தளங்களில் காணலாம்.



செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் எந்த ஒரு செபி பதிவு பெற்ற முதலீட்டு ஆலோசகரையும் அணுகலாம். கீழ்கண்ட இணைப்பில் செபி பதிவு பெற்ற முதலீட்டு ஆலோசகர்களின் பட்டியலைக் காணலாம்: https://www.sebi.gov.in.

இருப்பினும் முதலீட்டாளர்கள் வேண்டப்படாத முதலீட்டு ஆலோசனைகளை பதிவு செய்யப்படாத முதலீட்டு ஆலோசகரிடமிருந்து பெறுவதில் கவனமாக இருக்க வேண்டும். விவரங்களுக்கு, இந்த கையேட்டிலுள்ள இணைப்பு-III ஐ பாருங்கள்.

# 5

## செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்வதில் உள்ள முக்கிய ஆபத்துக்கள்

சந்தை ஆபத்து அல்லது அமைப்புசார் ஆபத்து: இது செக்யூரிட்டீஸின் ஒட்டுமொத்த செயல்திறன் மற்றும் பொதுவாக நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் காரணிகளால் முதலீடுகள் எதிர்கொள்ளும் அபாயத்தைக் குறிக்கிறது.

அமைப்பு சாரா ஆபத்து: அமைப்புசாரா ஆபத்து என்பதை ஒரு குறிப்பிட்ட நிறுவனம் அல்லது தொழில்துறையோடு இணைந்த ஆபத்து என்று விளக்கலாம்.

பணவீக்க ஆபத்து: பணவீக்க ஆபத்து என்பதை வாங்கும் திறன் ஆபத்து என்றும் அழைக்கலாம். பணவீக்கம் காரணமாக ஒரு முதலீட்டில் இருந்து கிடைக்கும் வருவாயின் வாங்கும் திறன் எதிர்காலத்தில் குறையும் என்பதால் அதன் மதிப்பிழப்பு வாய்ப்பு என்று இது வரையறுக்கப்படுகிறது.

லிக்விடிட்டி (எளிதில் பணமாக்ககூடிய தன்மை) ஆபத்து: ஒரு முதலீட்டை விரைவாக வாங்க அல்லது விற்க முடியாத நிலையில் லிக்விடிட்டி ஆபத்து ஏற்படுகிறது.

வணிக ஆபத்து: இயக்க செயல்பாடுகள், சந்தை அல்லது நிதி நிலைமை ஆகியவற்றில் சாதகமற்ற சூழல் காரணமாக ஒரு நிறுவனத்தின் வணிகம் பாதிக்கப்படலாம் அல்லது அதன் இயக்கத்தை நிறுத்திக்கொள்ள நேரிடும் ஆபத்தை இது குறிக்கிறது.

வோலட்டிலிட்டி (விலை மாறும் தன்மை) ஆபத்து காலப்போக்கில் நிறுவனத்தின் பங்கு விலை ஏற்றத்தாழ்வை காணும் போது விலை மாற்ற ஆபத்து விளைகிறது.

செலாவணி ஆபத்து: வெளிநாட்டுப் பணத்தில் அல்லது வெளிநாட்டுப் பண வணிக முதலீட்டில் முதலீடு செய்த ஒரு முதலீட்டாளர் அன்னியச் செலாவணி விலை ஏற்ற தாழ்வுகளால் விளையக்கூடிய ஆபத்தை எதிர்கொள்வதை இது குறிக்கிறது.

# 6

### ஆபத்தை எவ்வாறு குறைப்பது?

ஒரு முதலீட்டாளர் பல்வேறு வழிகளில் ஆபத்தைக் குறைக்க முயற்சிகளை மேற்கொள்ளலாம். சொத்து ஒதுக்கீடு யுக்திகளின் மூலம் அவர்களது முதலீட்டை பல்வேறு நிறுவனங்களில் சொத்து வகைகளில் பலவகைப்படுத்தி முதலீடு செய்வதன் மூலம் ஒரு முதலீட்டாளர் ஆபத்தைக் குறைக்கலாம்.

## கணக்குத் துவங்கும் நடைமுறை

# 7

### செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்வதற்கான முன்-தேவைகள்.

ஈக்விட்டி பங்குகளில் முதலீடு செய்ய ஒரு முதலீட்டாளர் மூன்று கணக்குகளைத் துவங்க வேண்டும் அவை:

- வங்கிக் கணக்கு
- வணிகக் கணக்கு
- டிமேட் கணக்கு

வங்கி கணக்கு

செபியில் பதிவு செய்து அங்கீகாரம் பெற்ற ஒரு பங்கு தரகரிடம் வணிகக் கணக்கு அல்லது தரகு கணக்கு வைத்துக் கொள்வது. பங்குச்சந்தையில் செக்யூரிட்டீஸ்களை வாங்க மற்றும் விற்க இந்த கணக்கு பயன்படுத்தப்படும். ஒரு வணிகக் கணக்கைத் துவங்க கணக்குத் துவங்கும் படிவம் ஒன்றை நீங்கள் பூர்த்தி செய்து, வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) என்ற உங்கள் கையெழுத்திட்ட ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

உங்கள் கணக்குத் தொடங்கும் படிவத்தை பூர்த்தி செய்யும் பொழுது கீழ்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்:

- பல்வேறு பங்குச்சந்தைகளில் வணிகத்தை மேற்கொள்ள உங்கள் விருப்பத் தேர்வுகளை குறிப்பிடும்போது உங்கள் கையெழுத்தை நீங்கள் இடவேண்டும்.

- உங்கள் கணக்கிற்கு பொருந்தக்கூடிய செலவுகள்/கட்டணங்கள்/தரகு கட்டணம் அனைத்தையும் நீங்கள் கவனமாக பார்க்க வேண்டும் மற்றும் அதன் பதிவுகளை வைத்திருக்க வேண்டும்.
- நீங்கள் வணிகம் மேற்கொள்ள விரும்பும் பிரிவுகளை அடையாளம் காணுங்கள் (ரொக்கப் பணம், எஃப்&ஓ, கரன்சி டெரிவேட்டிவ் அல்லது வேறு இதர பிரிவுகள்) டெரிவேட்டிவ்களில் வணிகம் செய்வதற்கு டெரிவேட்டிவ் பொருட்கள் பற்றிய புரிதல் வேண்டும்.
- தொடர் கணக்கு வசதி, பவர் ஆப் அட்டர்னி நிறைவேற்றல் போன்ற கூடுதல் வசதிகளை நீங்கள் அடைய விரும்பினால், எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்சனைகளைத் தவிர்க்க, நீங்கள் பங்குத் தரகருக்கு குறிப்பிடத்தக்க அதிகாரம் வழங்க வேண்டும்.
- உங்கள் மின்னஞ்சல் முகவரி, கைபேசி எண் ஆகியவற்றை கணக்குத் துவங்கும் படிவத்தில் நீங்கள் வழங்க வேண்டும். நீங்கள் அத்தியாவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய வணிக நிலைகளை உங்களுக்கு அவ்வப்போது தெரிவிக்க வணிக தரகர் மற்றும் பங்குச் சந்தைகள் இந்த தொடர்புத் தகவல்களை பயன்படுத்துவார்கள்.
- கணக்கு துவங்கும் படிவத்தின் ஒரு நகலை உங்கள் ஆவணங்களுக்காக நீங்கள் எப்போதும் கேட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# 8

## ஒரு கணக்கைத் துவங்கும் நடைமுறைகள்: உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) நடைமுறைகள்

டிமேட்/வணிகம்/வங்கி கணக்குகளை துவங்குகையில் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) ஆவணங்களை நீங்கள் சமர்பிக்க வேண்டும் கேஒய்சி என்பது என்ன மற்றும் அது ஏன் அவசியமாகிறது என்பது பற்றி நாம் அறிந்து கொள்ளலாம்

பண மோசடி தடுப்புச் சட்டம், 2002 மற்றும் அதன் கீழுள்ள விதிகளின் கீழ் கேஒய்சி என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. டிமேட்/வணிகம்/வங்கி கணக்குகளை துவங்குகையில் வாடிக்கையாளர் தனது அடையாளச் சான்று மற்றும் முகவரிச் சான்று ஆகியவற்றுக்கு செல்லத்தக்க அதிகாரபூர்வ ஆவணங்களை (ஓவிடி) சமர்பிக்க வேண்டும் அவைகள் கேஒய்சி தேவைகளின் ஒரு பகுதியாக இருக்கும். ஒரு முதலீட்டாளர் தனது அடையாளம் முகவரியை பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான ஆவணங்களான பான் அட்டை / யுஐடிஏஐ ஆதார்/ கடவுச்சீட்டு/ வாக்காளர் அட்டை/ ஓட்டுனர் உரிமம், போன்றவற்றின் மூலம் நிலைநாட்டலாம். கேஒய்சி படிவம் சமர்ப்பிக்கப்பட்ட உடன், ஒரு தனித்துவமான கேஒய்சி அடையாள எண். (கேஐஎன்) உருவாக்கப்பட்டு அது வாடிக்கையாளருக்கு குறுஞ்செய்தி/ மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். கேஒய்சி என்பது ஒருமுறைக்கான நடைமுறை மற்றும் அனைத்து இன்டர்மீடியரிகளுக்கும் செல்லத்தக்கது. செக்யூரிட்டீஸ் சந்தையில் மற்றொரு இன்டர்மீடியரியிடம் கணக்குத் துவங்குகையில் மீண்டும் இதே நடைமுறைகளை நீங்கள் மேற்கொள்ளத் தேவையில்லை.



இ-கேஒய்சி - இ-கேஒய்சி வசதியை யுஐடிஏஐ-ஆதார்/டிஜி லாக்கர் வசதிகளின் மூலமாக பயன்படுத்தி கேஒய்சி நடைமுறைகளை நிறைவேற்றலாம்.

- பங்குத்தரகரின் வலைத்தளம் வழியாக கணக்குத் துவங்கும் தகவல்கள் / படிவத்தை இணைய வழியில் பூர்த்தி செய்யுங்கள்.
- பிஓஏ(முகவரிச் சான்று)/பிஓஐ (அடையாளச் சான்று) போன்ற கட்டாய ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட உருவப்படங்களை சமர்ப்பியுங்கள்.
- ஐபிவி(தனிநபர் நேரடி சரிபார்ப்பு) நடைமுறையை காணொளிக் காட்சி அழைப்பு மூலம் நிறைவேற்றுங்கள்.
- ஆவணத்தில் டிஜிட்டல் கையெழுத்து இடுங்கள்.
- கணக்கு நடைமுறைப்படுத்தப்படும்

**உதவிக்குறிப்புக்கள்**

- சமர்ப்பிப்பதற்கு முன் அனைத்து ஆவணங்களையும் படித்து புரிந்து கொள்வதை உறுதிசெய்துக் கொள்ளுங்கள்.
- வெற்று ஆவணங்கள் எதிலும் கையெழுத்திடாதீர்கள்.
- கணக்குத் துவங்கும் தொகுப்பு இணைப்பில் குறிப்பிட்டுள்ள செய்ய வேண்டியவை செய்யக்கூடாதவைகளை எப்போதும் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் கணக்கில் நடைபெறும் பரிவர்த்தனைகள் குறித்த குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கைகளை பெறுவதற்கு உங்கள் கைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை உங்கள் வங்கி, டெப்பாசிட்டரி பங்கிக்கேற்பாளர் மற்றும் பங்குத் தரகர் ஆகியோரிடம் பதிவு செய்வதை உறுதிசெய்துக் கொள்ளுங்கள்..

# 9

## அடிப்படை சேவைகள் டிமேட் கணக்கு (பிஎஸ்டிஏ)

அடிப்படை சேவைகள் டிமேட் கணக்கு (பிஎஸ்டிஏ):

டிமேட் கணக்கு அடிப்படை சேவைகள் (பிஎஸ்டிஏ) என்பது கடனல்லாத செக்யூரிட்டீஸ்கள் (ஈக்விடிட்டிகளைப் போல) மற்றும் கடன் செக்யூரிட்டிகளின் மொத்த மதிப்பு ரூ.2 இலட்சத்துக்கு மிகாமல், ஒரே ஒரு டிமேட் கணக்கை (அனைத்து டெப்பாசிட்டரிகளிலும் சேர்த்து) வைத்திருக்கும் தனி நபர்களுக்கான டிமேட் கணக்கு அடிப்படை சேவை வசதிகளை குறிக்கிறது.

பிஎஸ்டிஏவுக்கான ஆண்டு பராமரிப்பு கட்டணம் (ஏஎம்சி) கட்டமைப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:

| பாதுகாப்பு வகை | கையிருப்பு மதிப்பு அடுக்குகள் | கட்டணங்கள் |
|---|---|---|
| கடனல்லாத-செக்யூரிட்டீஸ் | ரூ 50,000/- வரை | ஏஎம்சி இல்லாதது |
| | ரூ. ரூ 50,001 ரூபாயிலிருந்து 2,00,000/- வரை | ரூ 100/- வரை |
| கடன் செக்யூரிட்டீஸ்களுக்கு | ரூ 1,00,000/- வரை | ஏஎம்சி இல்லாதது |
| | ரூ. 1,00,001 ரூபாயிலிருந்து . 2,00,000/- வரை | ரூ 100/- வரை |

செபி அல்லது பொருத்தமான டெப்பாசிட்டரி வலைத்தளத்தில் இது பற்றிய சமீபத்திய விதிகளை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

மேலே குறிப்பிட்ட மூன்று கணக்குகளின் ஒரு தொகுப்பு (அதாவது, ஒரு வங்கிக்கணக்கு, ஒரு டிமேட் கணக்கு மற்றும் ஒரு வணிகக் கணக்கு) பெரும்பாலான சந்தர்ப்பங்களில் "1 இல் 3" கணக்கு என்று குறிப்பிடப்படுகிறது. முதலீட்டாளர்கள் மேலே குறிப்பிட்ட மூன்று கணக்குகளை தனித்தனியாக வெவ்வேறு டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்/ தரகர்/ நிறுவனங்களில் தொடங்கலாம் அல்லது இந்த மூன்று கணக்குகளையும் தொடங்குவதற்கான வசதியை அளிக்கும் ஒரு தனிப்பட்ட டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்/ தரகர்/நிறுவனத்தில் தொடங்கலாம்

செபி பதிவு பெற்ற பங்குத் தரகர்கள் மற்றும் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களின் பட்டியலை செபியின் அதிகாரபூர்வமான வலைத்தளம் (www.sebi.gov.in) அல்லது குறிப்பிட்ட அந்தந்த பங்குச்சந்தை அல்லது டெப்பாசிட்டரிகளின் வலைத்தளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## 10

### உரிமை வழங்கல் ஆவணம் (பவர் ஆப் அட்டர்னி)



உரிமை வழங்கல் ஆவணம் (பவர் ஆப் அட்டர்னி) என்பது உங்களது கணக்கு மற்றும் பணத்தின் மீது உங்களுக்குள்ள உரிமை மற்றும் அணுகல்களை வேறொருவருக்கு கொடுக்கக்கூடியது என்பதால் அது ஒரு அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஆவணமாகும். செக்யூரிட்டீஸ் சந்தையில், ஒரு வாடிக்கையாளர் உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) பங்குத்தரகர் மற்றும் /அல்லது டெப்பாசிட்டரி பங்கேற்பாளர் ஆகியோருக்கு நிறைவேற்றி தனது பங்குகள் வரவு மற்றும் நிதியின் வரவு /செலவு குறித்த டிமேட் மற்றும் வங்கிக் கணக்குகளை செயல்படுத்தும் அதிகாரத்தை வழங்கலாம். செபி வழிகாட்டுதல்களின்படி குறிப்பாக ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) வாடிக்கையாளர், பங்குத்தரகர் மற்றும் / டெப்பாசிட்டரி பங்கேற்பாளருக்கு நிறைவேற்றலாம்.

செபி வழிகாட்டுதல்களின் படி ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) வழங்க வேண்டும் என்பது கட்டாயமில்லை. ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) வழங்குவது என்பது முற்றிலும் விருப்பத்தேர்வு மற்றும் தன்னார்வத்தாலானது–ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) கையெழுத்திட்டு அளிப்பது உங்களுக்கு பயனளிக்கும் என்று நீங்கள் கருதினால், அதில் கையெழுத்திடலாம். ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பவர் ஆப் அட்டர்னி) நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலும் திரும்பப் பெறலாம்.

ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தின் (பவர் ஆப் அட்டர்னி) மூலம் நீங்கள் அதிகாரம் அளித்திருப்பவைகளுக்கு மாறாக, ஏதோ ஒரு காரணத்திற்காக உங்கள் கணக்கிலிருந்து பங்குகளை மாற்றும் ஏதாவது நடவடிக்கையை உங்கள் பங்குத்தரகர் செய்திருந்தால், நீங்கள் அது பற்றி உங்கள் பங்குத் தரகரிடம் உடனடியாகக் கேட்கவேண்டும். ஒரு வேளை அதற்கான பதில் அவர்களிடமிருந்து வரவில்லை என்றாலோ அல்லது அவர்கள் அளித்த பதில் உங்களுக்கு திருப்திகரமாக இல்லாவிட்டாலோ, நீங்கள் உடனடியாக அந்த விஷயத்தை டெப்பாசிட்டரி/ பங்குச்சந்தைக்கு எடுத்துச்செல்ல வேண்டும்

> ஒரு வேளை ஒரு உரிமை வழங்கல் ஆவணத்தை (பிஓஏ) பங்குத்தரகர் / டெப்பாசிட்டரி பங்கேற்பாளரின் பேரில் நீங்கள் நிறைவேற்ற விரும்பினால், தயவு செய்து செபி / பங்குச் சந்தைகள் / டெப்பாசிட்டரீஸ்கள் ஆகியவற்றின் அதிகாரபூர்வ வலைத்தளங்களில் வெளியிட்டிருக்கும் வழிகாட்டுதல்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

# 11

### நியமனம்

நியமனம் செய்வது என்பது ஒரு தனிப்பட்ட முதலீட்டாளர் அவர் மரணமடைய நேரும் பட்சத்தில், அவரது டிமேட் கணக்குகளில் வைத்துக் கொண்டிருக்கும் செக்யூரிட்டீஸ்கள் அல்லது அதன் மூலம் திரும்பப்பெற்றவைகளை (மியூச்சுவல் பண்டு தொடர்பான யூனிட்கள்) கேட்டுப் பெறும் உரிமையை அளிப்பதற்கு ஒருவரை நியமனம் செய்து கொள்ளும் வசதியை அளிக்கிறது.



## செக்யூரிட்டீஸ் சந்தையில் நான் எவ்வாறு முதலீடு செய்வது?

# 12

### ப்ரைமரி சந்தை வழி முதலீடு செய்வது

பொது வழங்கல் மூலமாக பொதுமக்களுக்கு ஒரு நிறுவனம் பங்குகளை வெளியிடும் சந்தர்ப்பத்தில், அந்தப் பங்குகளை பெறுவதற்கு தேவையான படிவங்களை நீங்கள் சமர்ப்பிக்கலாம். வழங்கும் நிறுவனம் செக்யூரிட்டீஸ்களை வழங்குவதற்கு சில குறிப்பிட்ட விதிகள், ஒழுங்குமுறைகள் போன்றவற்றை பின்பற்ற வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படும். ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகள் டிபியில் பராமரிக்கப்பட்டு வரும் விண்ணப்பதாரரின் டிமேட் கணக்குகளில் வரவு வைக்கப்படும். பங்குகள் ஒதுக்கீடு டிமேட் வடிவங்களில் மேற்கொள்ளப்படும் மற்றும் பின்னர் அவற்றை ரிமெட்டிரியலாக மாற்றிக்கொள்ளும் விருப்பத்தேர்வு முதலீட்டாளர்களுக்கு இருக்கிறது. பொது வெளியீடு முடிவடையும் போது வெளியீடு முடிந்த ஆறு (06) நாட்களுக்குள், அந்தப் பங்குகளின் வணிகம் தொடர்ந்து நடத்தப்படும் அங்கீகாரம் பெற்ற பங்குச்சந்தையில், ஒதுக்கீடு செய்யப்பட்ட பங்குகளின் பட்டியல் வெளியிடப்படும்.



தயவு செய்து கவனிக்கவும்:
செபியின் சமீபத்திய வழிகாட்டுதல்களின்படி பங்குச் சான்றிதழ்களை இயற்வடிவத்தில் அல்லது டிமேட் வடிவத்தில் வைத்துக்கொள்ள நீங்கள் விரும்பலாம். இருந்தாலும், ஏப்ரல் 01, 2021 முதல் செக்யூரிட்டீஸ்கள் டிமேட் வடிவத்தில் வைத்திருந்தால் மட்டுமே பங்கு மாற்றம் செய்ய முடியும். ஆகவே ஒரு டிமேட் கணக்கைத் துவங்கி அனைத்து செக்யூரிட்டீஸ்களையும் டிமேட் வடிவில் வைத்துக்கொள்வது விரும்பத்தக்கது. பங்குகள் ஒருவரது சட்டப்படியான வாரிசுகளுக்கு வாரிசுரிமை அல்லது மரபுரிமை காரணமாக மாற்றப்படுவதற்கு இந்த விதி பொருந்தாது.

# 13

## பிரைமரி சந்தையில் முதலீடு செய்வதற்கான நடைமுறைகள்.

ஒரு நிறுவனத்தின் பங்குகளை பொது வெளியீட்டின்/வழங்கல்களின் போது ஒரு விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து, பொது மக்களுக்கான வெளியீடு அமலில் இருக்கும் காலத்தில் அதற்கான கட்டணத்தை செலுத்தி நேரடியாக நிறுவனத்திலிருந்தே வாங்கலாம். அந்த விண்ணப்ப படிவத்தில், உங்கள் பெயர், முகவரி, விண்ணப்பிக்கும் பங்குகளின் எண்ணிக்கை, வங்கிக் கணக்கு விவரங்கள், பங்குகள் எந்த டிமேட் கணக்கில் செலுத்த வேண்டும் என்ற விவரம் போன்றவற்றை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும்.



அந்த ஐபிஓவில் முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் அதற்காக முடக்கப்பட்ட தொகை ஆதரவுடன் கூடிய விண்ணப்பம்(ஏஎஸ்பிஏ) மூலமும் மற்றும் ஒரு யூனிஃபைட் பேமெண்ட் இண்டர்ஃபேஸ் (யுபிஐ) முறையை பயன்படுத்தியும் விண்ணப்பிக்கலாம். (இந்தக் கையேட்டில் பின்னால் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது) அதன் பிறகு முதலீட்டாளர்கள் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும் மற்றும் அவர்களது விருப்பத்தேர்வுகளின் அடிப்படையில் பங்குகளை ஒதுக்கீடு செய்ய விண்ணப்பிக்க வேண்டும். முதலீட்டாளர் விண்ணப்பித்த பங்குகளுக்கான தொகை முதலீட்டாளரின் வங்கி கணக்கில் முடக்கப்படும். ஒரு ஐபிஓவின் பட்டியலிடும் நடைமுறைகள் முழுமையாக நடந்தேற வெளியீடு முடிந்த பிறகு ஆறு (06) வேலைநாட்கள் ஆகும். பங்குகள் வழங்கப்பட்ட முதலீட்டாளர்கள், அந்த பங்குகளை அவர்களது டிமேட் கணக்கில் பெறுவார்கள் மற்றும் அதற்கான தொகை அவர்களது வங்கி கணக்கிலிருந்து பிடிக்கப்படும். பங்குகள் ஒரு வேளை ஒதுக்கீடு செய்யப்படாவிட்டால், முதலீட்டாளரின் வங்கிக்கணக்கில் முடக்கப்பட்ட தொகை அடுத்த பயன்பாட்டுக்காக விடுவிக்கப்படும்.




எச்சரிக்கை:

- ஒரு நிறுவனத்தின் பங்குகளை வாங்கும் முன் நிறுவனத்தின் திட்டவிளக்க அறிவிப்பு/ரெட் ஹெர்ரிங் முன் விவரம்/வழங்கும் ஆவணம் ஆகியவற்றை கவனமாகப் படியுங்கள்.
- பொது வெளியீட்டின் போது, பங்குகளை வாங்க விண்ணப்பிக்கும் போது, பங்குகளின் விலை மற்றும் எண்ணிக்கைகளில் முறையான கவனம் செலுத்துங்கள்.
- நீங்கள் என்ன விலைக்கு விண்ணப்பித்தீர்களோ அந்த விலையை குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.
- சந்தை நிலை குறித்து உணர்ச்சிவசப்பட்டு முதலீடு செய்யாதீர்கள், மாறாக நிறுவனத்தை பற்றியும் அதன் நிதிநிலை பற்றியும் பகுத்தாய்வு செய்து முதலீடு செய்யுங்கள்.

# 14

## முடக்கப்பட்ட தொகைக்கு ஆதரவளிக்கும் விண்ணப்பம் (ஏஎஸ்பிஏ)



இப்போது முதலீட்டாளர்கள் ஐபிஓவில் செக்யூரிட்டீஸ் வாங்க ஏஎஸ்பிஏ மூலமாக விண்ணப்பிக்கலாம். ஏஎஸ்பிஏயில் விண்ணப்பதாரர் விண்ணப்பித்த பங்குகளுக்கு இணையான தொகை முடக்கப்பட்டிருக்கும், அது ஒதுக்கீடு செய்யப்படும் வரை அவரின் வங்கிக்கணக்கிலேயே இருக்கும். பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவுடன் உங்கள் கணக்கிலிருந்து தொகை பிடிக்கப்படும். முடக்கப்பட்ட தொகை தொடர்ந்து வட்டியை பெறும், ஒதுக்கீடு செய்யப்படாவிடில் அதைத் திருப்பிச்செலுத்த வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு, ஐபிஓவில் விண்ணப்பிக்க காசோலை அனுப்புவதற்கு பதிலாக, இப்போது நீங்கள் முடக்கப்பட்ட தொகை ஆதரவு விண்ணப்பம் (ஏஎஸ்பிஏ) மூலம் விண்ணப்பிக்கலாம். இந்த வசதியை சில வசூல் வங்கிகள் அளிக்கின்றன. செபி வலைத்தளத்தில் இந்த வங்கிகளின் பட்டியல் இருக்கிறது. முதலீட்டாளர்கள் இப்போது ஐபிஓவில் யூனிஃபைட் பேமெண்ட் இண்டர்ஃபேஸ் (யூபிஐ) முறையை பயன்படுத்தி முதலீடு செய்யலாம். யுபிஐ-யை பயன்படுத்தி முதலீடு செய்யும் நடைமுறைகள் இணைப்பு-IV இல் விளக்கப்பட்டுள்ளது.


# 15

## செகண்டரி சந்தை வழி முதலீடு செய்தல்

பங்குச்சந்தையின் அங்கீகாரம் பெற்ற ஒரு பங்குத் தரகரிடம் வணிக கணக்கை நீங்கள் தொடங்கியவுடன், நீங்கள் ஒரு நிறுவனத்தின் பங்குகளை பங்குத் தரகர் மூலம் பங்குச்சந்தையில் வாங்கலாம் அல்லது விற்கலாம் இணையவழி வணிக கணக்கை பயன்படுத்தி தரகரின் வலைத்தளம், தரகரின் கைபேசி வணிக செயலி, தொலைபேசி வழியாக கால் & டிரேட் வசதியை பயன்படுத்தி, தரகரின் அலுவலகத்திற்கு நேரடியாகச் சென்று அல்லது பங்குத் தரகர்களின் அதிகாரம் பெற்ற நபர்கள் மூலம் செக்யூரிட்டீஸ்களை வாங்க அல்லது விற்பதற்கான ஆணையை நீங்கள் சமர்ப்பிக்கலாம்.



**கேட்பாணை சமர்ப்பிப்பதற்கான முறைகள்:**




எச்சரிக்கை:

- பங்குகளை வாங்குவதும் விற்பதும் செபி பதிவு பெற்ற பங்குத் தரகர் அல்லது அதிகாரம் பெற்ற நபர் மூலம் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.
- செகண்டரி சந்தையில் வணிகம் செய்யும் போது உங்களால் தரகரிடம் வழங்கப்பட்ட கேட்பாணைகளின் பதிவேடு ஒன்றை எப்போதும் வைத்திருங்கள்.

# 16

## வணிக நாட்கள் மற்றும் வணிகம் மற்றும் தீர்வு சுழற்சி.

பங்குச் சந்தையில் வணிகம் வாரத்தின் அனைத்து நாட்களிலும் நடக்கும் (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் பங்குச் சந்தையில் விடுமுறை அறிவிக்கப்பட்ட தினங்கள் தவிர) ஒருவேளை பங்குகளை வாங்க வேண்டும் என்றால், அது தொடர்பான தீர்வுக்கு தொகை செலுத்தும் நாளுக்கு முன்னதாகவே உங்கள் பங்கு தரகரின் வங்கி கணக்கில் பணம் செலுத்த வேண்டும். (உங்கள் கேட்பாணை தொடர்பான செயல்பாடு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதை உறுதி செய்து உங்கள் தரகரிடம் இருந்து தகவல் வந்த உடனே செலுத்துவது விரும்பத்தக்கது) அதேபோன்று, பங்குகளை விற்பனை செய்ய வேண்டும் என்றால், அது தொடர்பான தீர்வை அடைவதற்கு பணம் செலுத்தும் நாளுக்கு முன்னதாகவே, பங்குகளை தரகரின் டிமேட் கணக்கில் வழங்கப்படவேண்டும்.




பணம் செலுத்தும் நாள் மற்றும் பணம் வழங்கும் நாள் என்றால் என்ன? பணம் செலுத்தும் நாள் என்பது தரகர்கள் தீர்வு கூட்டு நிறுவனங்களுக்குத் தொகை செலுத்தும் அல்லது செக்யூரிட்டீஸ்களை வழங்கும் நாள் ஆகும். பணம் வழங்கும் நாள் என்பது தீர்வு கூட்டு நிறுவனங்கள் தரகருக்கு பணம் அல்லது செக்யூரிட்டீஸ்களை வழங்கும் நாள் ஆகும் தீர்வு சுழற்சி ஒரு டி+2 சூழல் முறை அடிப்படையில் அமல்படுத்தப்படுகிறது ஏப்ரல் 01, 2003 முதல் (T என்பது வணிக நாளை குறிக்கிறது) உதாரணமாக, திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட வணிகங்கள் குறிப்பாக அடுத்து வரும் புதன்கிழமை தீர்வு செய்யப்படும்.

(வணிக நாளிலிருந்து 2 வேலை நாட்களை கருத்தில் கொள்கிறது) பணம் மற்றும் செக்யூரிட்டீஸ் செலுத்தப்படுவது மற்றும் வழங்கப்படுவது ஆகியவை டி+2 நாட்களில் மேற்கொள்ளப்படுவதை பங்குச்சந்தைகள் உறுதி செய்கிறது.

செலுத்தப்படும் பணம்/செக்யூரிட்டீஸ்கள் என்பது தரகர்களின் கணக்கிலிருந்து எக்ஸ்சேஞ் கணக்குக்கு மாற்றப்படுவதைக் குறிக்கிறது.

பணம் வழங்கப்படுவது: வழங்கப்படும் பணம்/செக்யூரிட்டீஸ்கள் என்பது எக்ஸ்சேஞ் கணக்கிலிருந்து பணம்/செக்யூரிட்டீஸ்கள் தரகர்களின் கணக்குக்கு மாற்றப்படுவதைக் குறிக்கிறது.

எச்சரிக்கை:
வணிக தீர்வு
- சுழற்சியின் பணம் செலுத்தும் நாளுக்கு முன்பே உங்கள் வங்கி/டிமேட் கணக்கில் முறையே போதுமான பணம்/செக்யூரிட்டீஸ் எப்போதும் இருப்பதை உறுதி செய்யுங்கள்,
- தீர்வுக்கு தேவையான அளவு பணம்/செக்யூரிட்டீஸ் இல்லையென்றால் முதலீட்டாளருக்கு அபராதம் விதிக்க நேரிடும் மற்றும் அவருக்கு மேலும் இழப்புக்களை ஏற்படுத்தக்கூடும்.

# 17

## ஒப்பந்தக் குறிப்பு

தரகரால் மேற்கொள்ளப்பட்ட வணிகத்துக்கு ஆதாரமாக விளங்குவது ஒரு ஒப்பந்தக் குறிப்பு. அது செக்யூரிட்டிகள் வாங்கியது/விற்றது, வணிக விலை, வணிக நேரம், தரகுத் தொகை போன்ற விவரங்களோடு கூடிய ஒரு சட்டபூர்வமான ஆவணம். ஒப்பந்தக் குறிப்புகள் இயற்வடிவத்தில் அல்லது மின்னணு வடிவத்தில் வழங்கப்படலாம். ஒரு வேளை மின்னணு ஒப்பந்தக் குறிப்பை பெற நீங்கள் தேர்வு செய்தால், உங்கள் மின்னஞ்சல் முகவரியோடு ஒரு திட்டவட்டமான உரிமையை பங்குத் தரகருக்கு வழங்க வேண்டும். அம்மாதிரியான ஒப்பந்தக் குறிப்புகள் மின்னணு முறையில் கையெழுத்திடப்பட்டு, மறைபொருளாக்கப்படும் மற்றும் அதை மோசடியாக



திருத்தம் செய்ய முடியாது. அம்மாதிரியான ஒப்பந்த குறிப்புகள் எதிர்காலத்தில் சரிபார்ப்பதற்காக முதலீட்டளரால் பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் பின்னாளில் ஏதாவது தாவா ஏற்படுமானால், இவை முக்கியத்துவம் பெறும்.

எச்சரிக்கை:

- ஒப்பந்தக் குறிப்பு பங்குத் தரகரால் வணிகம் மேற்கொள்ளப்பட்ட 24 மணி நேரத்திற்குள் வழங்கப்பட வேண்டும். ஒப்பந்தக் குறிப்பில் ஏதாவது முரண்பாடு இருந்தால், முதலீட்டாளர் உடனடியாக அதுபற்றி பங்கு தரகரிடம் தெரியப்படுத்த வேண்டும்.
- ஒப்பந்த குறிப்பில் தரப்பட்டுள்ள விவரங்களோடு, சந்தையில் உங்களது ஆணைகளை அளிக்கும் போது உங்களால் பராமரிக்கப்படும் பதிவேடுகளை எப்போதும் மறுசரிபார்ப்புக்கு உட்படுத்துங்கள். ஏதாவது முரண்பாடு இருந்தால், உடனடியாக அது குறித்து உங்கள் பங்கு தரகரை தொடர்பு கொள்ளுங்கள்..

வாடிக்கையாளர் ஆணை பதிவேடு:

பங்கு தரகர்கள் வாடிக்கையாளர்கள் வணிகங்களை மேற்கொள்ளும் முன் வாடிக்கையாளர் அவ்வாறான ஒரு ஆணை கொடுத்ததற்கான ஆதாரத்தை வைத்துக்கொண்ட பிறகே மேற்கொள்ள வேண்டும், அவை இந்த வடிவத்தில் இருக்கலாம்:



- எழுதப்பட்ட தாள் வடிவில் வாடிக்கையாளரால் கையெழுத்திடப்பட்டு,
- தொலைபேசி ஒலிப்பதிவு
- அங்கீகரிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலிருந்து வந்த மின்னஞ்சல்.
- இணைய பரிமாற்றங்களுக்கான சிற்றேடு
- கைபேசி மூலம் அனுப்பப்பட செய்திகளின் பதிவு
- சட்டப்படி சரிபார்க்கக்கூடிய வேறு எந்த பதிவேடும்.

# 18

## முதலீட்டாளர்களுக்கு அனுப்பப்படும் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கைகள்

முதலீட்டாளர்கள் அவர்களது வணிக மற்றும் டிமேட் கணக்குகளில் நடைபெறக்கூடிய எந்த ஒரு வணிகம்/பரிவர்த்தனை நடவடிக்கைகளுக்கு குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கை வசதிகளை இலவசமாகப் பெற குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் எச்சரிக்கைகளை தேர்வு செய்யலாம். இந்த வசதியைப் பெற, முதலீட்டாளர்கள், அவர்களது கைபேசி எண்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியை அவர்களது பங்குத் தரகர்கள் மற்றும் டெப்பாசிட்டரி பங்குதாரர்களிடம் முறையாக பகிர்ந்து கொண்டு புதுப்பிக்க வேண்டும்.



# 19

**தொடர் கணக்கு பராமரிக்க அதிகாரம் வழங்குதல்.**



வழக்கமான சந்தர்ப்பங்களில், ஒரு தரகரால் நிறைவேற்றப்படும் ஒரு பரிமாற்றத்திற்கான (வாங்க/விற்க) தீர்வு பணம்/செக்யூரிட்டீஸ் வழங்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். இருப்பினும், நீங்கள் பங்குச் சந்தையில் தொடர்ந்து பங்குகள் வணிகத்தில் ஈடுபட்டால், உங்கள் பங்குகள் அல்லது நிதியை இவற்றில் பொருத்தமான ஒன்றை பங்குத் தரகரிடத்தில் தனியாக வைத்துக்கொள்ளக் கூடிய ஒரு தொடர் கணக்கை பராமரிக்கச் சொல்லி, உங்கள் தரகருக்கு குறிப்பிட்ட வகையில் நீங்கள் அதிகாரம் அளிக்கலாம் செக்யூரிட்டீஸ் தொடர்பான பரிமாற்றங்களை எளிதாக செய்ய தொடர் கணக்கு உதவும், அந்த பங்கு தரகரிடம் வைத்துள்ள தொடர் கணக்கில் உள்ள பங்குகள் அல்லது நிதி, எதிர்காலத்தில் தீர்வு செய்யவேண்டிய பரிமாற்ற செட்டில்மெண்டுகளுக்கு எதிராக சரிசெய்துக் கொள்ளப்படும்.

தொடர் கணக்குக்கான அதிகாரம் வழங்குதல் தானார்வத்தாலானது மற்றும் அடிக்கடி செக்யூரிட்டீஸ்களை வாங்கி விற்கும் முதலீட்டாளர்களுக்கு உதவிகரமானது. தொடர் கணக்குக்கான அதிகாரம் வழங்குதலில் தேதி குறிப்பிட வேண்டும் மற்றும் அதை எப்போது வேண்டுமானாலும் திரும்ப பெற்றுக் கொள்ளலாம். நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களின் உண்மையான தீர்வுகள் குறைந்தபட்சம் 30 நாட்கள் /90 நாட்களுக்கு ஒருமுறை முதலீட்டார்கள் (வாடிக்கையாளர்) தேர்வு செய்ததற்கு ஏற்ப தரகரால் செய்யப்படும்

# 20

**வணிக சரிபார்ப்பு**

பரிமாற்ற வலைத்தளங்களில் உள்ள வணிக சரிபார்ப்பு கூறு உங்கள் கணக்கில் நிறைவேற்றப்பட்ட வணிகங்களை சரிபார்ப்பதற்கான ஒரு எளிய கருவி. வணிகத்தின் தரவுகள் டி+1 நாளில் கிடைக்கும்.



# 21

### மார்ஜின் என்றால் என்ன?



பரிமாற்றங்கள்/ தீர்வு கூட்டு நிறுவனங்களால் மார்ஜின் விதிக்கப்படுகிறது மற்றும் முதலீட்டாளர்கள் சார்பில் ஒரு வணிகத்தை நிறைவேற்றுவதற்கு முன் அவர்களிடமிருந்து தரகர்களால் வசூல் செய்யப்படுகிறது. ஒரு முதலீட்டாளரால் வாங்கும் வணிகத்துக்குப் பணம் செலுத்தப்படவில்லை அல்லது விற்கும் வணிகத்துக்கு செக்யூரிட்டீஸ்கள் வழங்கவில்லை என்ற ஆபத்தை குறைப்பதற்காக மார்ஜின் தொகை வசூலிக்கப்படுகிறது. மார்ஜின் தொகையை ரொக்க பணம் அல்லது செக்யூரிட்டீஸ் அல்லது பணத்திற்கு ஈடான ஒன்று, அதாவது காலவரை வைப்புத் தொகை, வங்கி உத்திரவாதம், ஃபண்ட்ஸ் யூனிட்டுக்கள், அரசு கடனீட்டுப் பத்திரங்கள், கருவூல பில்கள் போன்றவை டீமாட் வடிவத்தில் வழங்கலாம்.

செப்டம்பர் 01, 2020 முதல் முதலீட்டாளர்கள் (வாடிக்கையாளர்) மார்ஜின் தொகையை “செக்யூரிட்டீஸை” கொண்டு மட்டுமே செலுத்த முடியும், இதற்கென சிறப்பாக வரையறுக்கப்பட்ட பங்கு தரகரின் டிமேட் கணக்கின் பேரில் அடமானம் வைப்பதன் மூலம் முன்கூட்டியே பணம் செலுத்துதல்: ஒருவேளை முதலீடு செய்பவர் மார்ஜின் தொகையை செலுத்துவதிலிருந்து விலக்கு பெற விரும்பினால், முதலீட்டாளர் “முன்கூட்டியே பணம் செலுத்துவதை" பயன்படுத்தலாம், அப்பொழுது தரகருக்கு பணம் செலுத்துதல் / பங்குகள் வழங்குதல் என்பது தரகரால் குறிப்பிடப்பட நேரம்/தேதிக்கு முன்பாகவே கொடுக்க வேண்டும்.

# 22

### பங்குத்தரகர் மற்றும் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்கள் வழங்கும் கணக்கு அறிக்கை



உங்களால் மேற்கொள்ளப்பட்ட பரிமாற்றங்களின் மாதாந்திர, காலாண்டு அறிக்கைகள் போன்ற இதர அறிக்கைகளை இலவசமாகவும், தொடர்ந்தும் பங்குத்தரகர் மற்றும் டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களிடமிருந்து பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உள்ளது. டெப்பாசிட்டரீஸ் மற்றும் பங்குச்சந்தைகள் உங்கள் பதிவு பெற்ற கைபேசி அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு உங்களுக்குத் தகவல் அளிப்பார்கள் உங்கள் கணக்கு தொடர்பான பரிமாற்றங்கள் பற்றி உங்களால் அந்த செய்திகளை புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அந்த விஷயம் பற்றி உங்கள் வங்கி, டெப்பாசிட்டரி பங்கேற்பாளர், உங்கள் பங்குச்சந்தை, தரகர் ஆகியோரிடம் விளக்கம் கேளுங்கள் அல்லது வழிகாட்டுதல்களுக்கு செபியின் கட்டணமில்லா சேவையை அழையுங்கள். இடைத்தரகர்களிடம் உங்கள் தொடர்பு தகவல்களை எப்போதும் புதுப்பித்து வைத்திருங்கள், அப்போது தான் எச்சரிக்கைகளையும் கணக்கு அறிக்கைகளையும் சரியான காலத்தில் உங்களால் பெறமுடியும். அம்மாதிரியான அறிக்கையை நீங்கள் பெறவில்லை என்றால், பொருத்தமான அமைப்புகளிடம் அது பற்றி நீங்கள் கேள்வி எழுப்ப வேண்டும்

நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களின் இருப்பு அறிக்கையை ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 ஆம் தேதி உங்கள் பங்குத் தரகரிடமிருந்து பெறுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு

# 23

## தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (சிஏஎஸ்)

தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (சிஏஎஸ்) என்பது, ஒரு முதலீட்டாளரால் ஒரு மாதத்தில் அனைத்து ஃபண்ட்களிலும் மற்றும் இதர செக்யூரிட்டீஸ்களை கொண்ட டிமேட் கணக்(கில்)குகளில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனைகளின் விவரங்களைக் கொண்ட ஒரு தனி/கூட்டு கணக்கு அறிக்கையாகும். உங்களது சிஏஎஸ்-ஐ நீங்கள் பெற்றுக்கொள்ளும் பொருட்டு உங்களது பான் அட்டை எண்ணை உங்களது பங்குத் தரகர் / டெப்பாசிட்டரி பங்கேற்பாளர் ஆகியோரிடம் புதுப்பிக்க வேண்டும்.



# 24

## டெரிவேட்டிவ்ஸ் சந்தை

டெரிவேட்டிவ்ஸ் என்பது அதன் மதிப்பை அடிப்படையான பாதுகாப்பு அல்லது நிதிசார் முறையாவணங்கள் மூலம் பெறும் ஒரு நிதிசார் முறையாவணம் ஆகும். அடிப்படையான பாதுகாப்பு என்பது, ஈக்விட்டியாக, பொருளாக, பணமாக, இதர வகைகளாக இருக்கலாம்.



அடிப்படையில் டெரிவேட்டிவ்ஸ் முதலீட்டாளர்களால் அவர்களது நிலையை நட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும் மற்றும் விலை ஆபத்தை குறைத்துக் கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது. நட்டத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதென்பது, ஒரு அடிப்படை ஆபத்து மேலாண்மை யுக்தி, அதில் முதலீட்டாளர்கள் பாதகமான விலை ஏற்ற இறக்க ஆபத்தை சரிசெய்து கொள்ளும் விதமாக நிதிசார் முறையாவணங்களில் யுக்திபூர்வமாக முதலீடு செய்வார்கள்.

டெரிவேட்டிவ்ஸில் பங்குபெறுபவர்கள், நட்ட பாதுகாப்பாளர்கள், யூக வணிகர்கள், மத்தியஸ்தர்கள் மற்றும் பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு வகையில் பங்குபெறுபவர்களாக இருப்பார்கள்.

ஃப்யூசர்ஸ் அண்ட் ஆப்ஷன்ஸ் அல்லது பொதுவாக எஃப்&ஓ பிரிவு என்று அழைக்கப்படுவது செக்யூரிட்டீஸ் சந்தையில் டெரிவேட்டிவ்ஸ் பிரிவில் ஒரு முக்கியமான பங்கை வகிக்கிறது. ஃப்யூசர்ஸ் அண்ட் ஆப்ஷன்ஸ் என்பவை இருவேறு வகையான டெரிவேட்டிவ்கள் ஆகும்.

ஃப்யூசர்ஸ் ஒப்பந்தம் என்பது ஒரு அடிப்படையான பொருளை முன்தீர்மானிக்கப்பட்ட விலையில் எதிர்கால தேதியில் வாங்க அல்லது விற்க வரையறுக்கப்பட்ட வணிக ஒப்பந்தம்.

ஆப்ஷன்ஸ் ஒப்பந்தம் என்பது ஒரு நிதிமுறையாவணம், அது ஆப்ஷன்ஸ் வாங்குபவருக்கு, முன் தீர்மானிக்கப்பட்ட தேதி மற்றும் விலையில் வாங்குவதற்கான விருப்ப உரிமையை அதன் கடப்பாடு இல்லாமல் வழங்குகிறது. ஒரு அழைப்பு ஆப்ஷன் என்பது ஒருவருக்கு அடிப்படையான செக்யூரிட்டியை வாங்கும் உரிமையை அளிக்கிறது மற்றும் அளிக்கும் ஆப்ஷன் என்பது ஒருவருக்கு அடிப்படையான செக்யூரிட்டியை விற்கும் உரிமையை அளிக்கிறது. ஆப்ஷன்ஸ் ஒப்பந்தங்களைப் பெறும் முதலீட்டாளர்களிடம் ஒரு கூடுதல் மதிப்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது,

தயவுசெய்து கவனத்தில் கொள்ளுங்கள் டெரிவேட்டிவ்ஸ் அதிக ஆபத்து நிறைந்த பொருளாகும் அவை முக்கியமாக இழப்புக்காப்பு பேரங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது. சிறுவணிக முதலீட்டாளர்களுக்கு இது பரிந்துரைக்கப்படுவதில்லை.

## மியூச்சுவல் ஃபண்ட்ஸ் மற்றும் இடிஎஃப்கள்

# 25

### மியூச்சுவல் ஃபண்ட்ஸ்



ஒரு மியூச்சுவல் ஃபண்ட் ஆனது அதிகளவிலான முதலீட்டாளர்களிடமிருந்து பெற்ற பணத்தை ஒருசேர சேமித்து அந்தப் பணத்தை, பங்குகள், கடன் பத்திரங்கள், குறுகிய கால பணச்சந்தை ஆவணங்கள் மற்றும் இதர செக்யூரிட்டீஸ் அல்லது சொத்துக்கள் அல்லது இந்த அனைத்து முதலீடுகளின் ஒரு தொகுப்பில் முதலீடு செய்கிறது. மியூச்சுவல் ஃபண்ட்ஸ் திட்டங்கள் எதுவொன்றையும் வெளியிடப்படுவதற்கு முன்பும் செபியில் பதிவு பெறவேண்டும். மியூச்சுவல் ஃபண்ட்ஸ் திட்டங்களின் குறிக்கோள் அடிப்படையில் மியூச்சுவல் ஃபண்ட்ஸ் பல்வேறு வகைகளாக பிரிக்கப்படலாம். அந்தத் திட்டங்கள் பல்வேறு வகையான முதலீட்டாளர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டவை- இடர் தவிர்ப்பு முதலீட்டாளர்கள், (அடிப்படையில் பெரிய ஆபத்தை எடுக்க விரும்பாத ஒரு பழமைவாத முதலீட்டாளர்) மித முதலீட்டாளர் (ஓரளவு ஆபத்தை மேற்கொள்ள விரும்பும் முதலீட்டாளர்கள்) தீவிரமான முதலீட்டாளர்கள் (அதிக லாபத்தை எதிர்பார்த்து அதிகளவு ஆபத்தை எதிர்கொள்ள விரும்பும் முதலீட்டாளர்கள்).

மியூச்சுவல் ஃபண்ட்ஸை வகைப்படுத்துதல் தற்போது மியூச்சுவல் ஃபண்ட்ஸ் விரிவாக ஐந்து வகையாக கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளன:

- சாதாரணப் பங்குத் திட்டங்கள்: அடிப்படையில் பங்குதிரள்/பங்குகளில் முதலீடு செய்யும் மியூச்சுவல் ஃபண்ட்ஸ்
- கடன் ஆவணத் திட்டங்கள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வருமானம் ஈட்டும் கடன் பத்திரம் மற்றும் அரசு பத்திரங்கள் போன்ற செக்யூரிட்டிகளில் முதலீடு செய்யும் மியூச்சுவல் ஃபண்ட்ஸ்
- கலப்புத் திட்டங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள், நிர்ணயிக்கப்பட்ட வருமானம், ரொக்கப் பணம் போன்ற சொத்து வகைகளில் முதலீடு செய்யும் மியூச்சுவல் ஃபண்ட்ஸ்.
- தீர்வு நோக்கிய திட்டங்கள் பணிஓய்வு, குழந்தைகளுக்கான திட்டம் போன்ற தனிமனிதரின் குறிக்கோள்களுக்கு இணங்க முதலீடு செய்யும் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள்.
- இதர திட்டங்கள் இன்டெக்ஸ் பண்டு, செக்டோரல் பண்டு போன்ற இதர அனைத்துத் திட்டங்களும்

# 26

**மியூச்சுவல் ஃபண்ட்ஸில் எவ்வாறு முதலீடு செய்வது?**


பொதுவாக மியூச்சுவல் ஃபண்ட்ஸின் திட்ட வெளியீடுகள் பற்றி செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தப்படும். தேவையான தகவல்கள் மற்றும் விண்ணப்ப படிவங்களுக்காக நாடெங்கிலும் பரவியிருக்கும் மியூச்சுவல் ஃபண்ட்ஸ் முகவர்கள் மற்றும் விற்பனையாளர்களை முதலீட்டாளர்கள் அணுகலாம். மியூச்சுவல் ஃபண்ட்ஸில் முதலீடு செய்யும் போது, முதலீட்டாளர் முதலில் அவர்களது கேஒய்சி நடைமுறைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு முதலீட்டாளர் கேஒய்சி-யை நிதி கிளை அல்லது தலைமை பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக பதிவு செய்யலாம். மாறாக, ஒரு தனிநபர் இ-கேஒய்சியை அவரது ஆதார் அட்டை அல்லது பான் அட்டை எண்ணை பயன்படுத்தி நிறைவேற்றலாம்.

கேஒய்சி நடைமுறைகள் முடிந்த உடன், அதன் பிறகு முதலீட்டாளர் அவர் முதலீடு செய்ய விரும்பும் திட்டம் பற்றி முடிவு செய்ய வேண்டும். அந்த முடிவு ஆபத்து விருப்பம் மற்றும் நிதி இலக்கு ஆகியவற்றின் அடிப்படையில் இருக்கும். மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களை கணித்து எண்ணிக்கைகளை குறைத்தவுடன், முறையாக அந்தத் திட்டங்களில் முதலீடு செய்ய தேவையான விண்ணப்ப படிவங்களை முதலீட்டாளர் நிரப்ப வேண்டியதிருக்கும். மியூச்சுவல் ஃபண்ட்ஸில் அம்மாதிரியான சேவைகளை வழங்கும் முகவர்கள் மற்றும் விற்பனையாளர்கள் மூலமாக படிவங்களை சமர்ப்பிக்கலாம் அல்லது மியூச்சுவல் ஃபண்ட்ஸில் அல்லது நேரடியாக அளிக்கலாம். விண்ணப்பப் படிவத்தை நிரப்பும்போது ஒரு முதலீட்டாளர், தனது பெயர், முகவரி, விண்ணப்பிக்கும் யூனிட்டுகளின் எண்ணிக்கை போன்ற இதர தேவையான விவரங்கள் அனைத்தையும் விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடவேண்டும். பின்னாளில் பங்குத்தொகை அல்லது மீள்வாங்குதல் போன்றவைகளுக்காக மியூச்சுவல் ஃபண்டால் வழங்கப்பட்ட காசோலை/வரைவோலை போன்றவற்றை முறைகேடான வகைகளில் பணமாக்குவதை தவிர்க்க அவரது வங்கிக் கணக்கு எண்ணைக் முதலீட்டாளர் கொடுக்க வேண்டும். பின்னாளில் முகவரி, வங்கிக்கணக்கு எண் போன்றவற்றில் ஏதாவது மாற்றம் இருக்குமானால், அதை உடனடியாக மியூச்சுவல் ஃபண்ட்டுக்கு தெரிவிக்க வேண்டும். முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு நடைமுறைகளை மேலும் எளிதாக்க ஒட்டுமொத்த தொகை முதலீட்டுக்கும் கூடுதலாக கீழ்கண்ட விருப்பத் தேர்வுகளை மியூச்சுவல் ஃபண்ட்ஸ் அளிக்கிறது.

- முறையான முதலீட்டுத் திட்டங்கள்: ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் குறிப்பிட்ட இடைவெளிகளில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை முதலீடு செய்யும் வசதி.
- முறையாக திரும்பப்பெறும் திட்டங்கள் ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் குறிப்பிட்ட இடைவெளிகளில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை திரும்பப்பெறும் வசதி
- முறையாக மாற்றம் செய்யும் திட்டம். ஒரு திட்டத்திலிருந்து நிதியை மற்றொரு திட்டத்திற்கு குறிப்பிட்ட இடைவெளிகளில் மாற்றும் வசதி.

## 27

**மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களை வகைப்படுத்துதல்**



செபியின் வழிகாட்டுதல்களின் படி, மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள் அவற்றின் ஆபத்து நிலைகளுக்கு இணங்க வகைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் அது ஆபத்து அளவீட்டு மானியில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். பல்வேறு வகையான ஆபத்து நிலைகளை கொண்ட ஆபத்து அளவீட்டுமானி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

- குறைந்த அளவு முதலீட்டுத் தொகை குறைந்த அளவு ஆபத்துக்குட்பட்டது
- குறைந்த அளவிலிருந்து மிதமான அளவு வரை முதலீட்டுத் தொகை மிதமான அளவில் ஆபத்துக்குட்பட்டது .
- மிதமானது: முதலீட்டுத் தொகை மிதமான ஆபத்துக்குட்பட்டது
- ஓரளவு அதிகமானது: முதலீட்டுத் தொகை ஓரளவு அதிக ஆபத்துக்குட்பட்டது
- அதிகமானது: முதலீட்டுத்தொகை அதிக ஆபதுக்குட்பட்டது
- மிக அதிகமானது முதலீட்டுத்தொகை மிக அதிக ஆபத்துக்குட்பட்டது


- ஆபத்து அளவீட்டு மானி மாதாந்திர அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

- மியூச்சுவல் ஃபண்ட்ஸ்/ஏஎம்சிக்கள் அவர்களது திட்டத் தொகுப்பு வெளியீடுகளோடு சேர்த்து அவர்களது அனைத்துத் திட்டங்களின் ஆபத்து அளவீட்டு மானியை முறையே அவர்களது வலைத்தளம் மற்றும் ஏஎம்எஃப்ஐ வலைத்தளத்தில் ஒவ்வொரு மாதம் முடிவடைவதற்கு 10 நாட்களுக்கு முன் வெளியிடவேண்டும்.

- ஒரு குறிப்பிட்ட திட்டத்தில் முதலீடு செய்வதற்கு முகவர்கள்/விற்பனையாளர்கள் அளிக்கும் ஊக்கத்தொகை/பரிசுகள் போன்றவற்றினால் முதலீட்டாளர்கள், திசை திரும்பிவிடக் கூடாது. அதற்கு மாறாக, மியூச்சுவல் ஃபண்ட்டின் கடந்தகால செயல்பாட்டை கருத்தில் கொள்ளுங்கள் மற்றும் குறிக்கோளுடன் கூடிய தகவலறிந்த முடிவுகளை எடுக்க வேண்டும்.

## 28

**பங்குச்சந்தை வணிக நிதி (இடிஎஃப்)**




பங்குச்சந்தை வணிக நிதி (இடிஎஃப்) என்பது ஒரு பாதுகாப்பு குறியீட்டெண், பொருள், கடனாவணம், அல்லது நிதிக் குறியீட்டெண் போன்ற சொத்துக்களின் தொகுப்பு ஆகியவற்றை கண்காணித்து செக்யூரிட்டீஸ் சந்தையில் வணிகம் மேற்கொள்கிறது. சுருக்கமாகச் சொல்லப் போனால், இடிஎஃப்கள் சென்செக்ஸ், நிஃப்டி போன்ற குறியீடுகளை பின்தொடர்கிறது. இடிஎஃப்-இல் யூனிட்டுக்களை நீங்கள் வாங்கும் போது உண்மையில் நீங்கள் குறியீட்டு எண்களின் செயல்பாடுகளை தொடரும் ஒரு திட்டவரிசையிலுள்ள யூனிட்டுக்களை வாங்குகிறீர்கள். இடிஎஃப்கள் பொதுவாக அவை பின்தொடரும் குறியீட்டு எண்களின் செயல்திறனை பிரதிபலிக்கின்றது.

வழக்கமான மியூச்சுவல் ஃபண்ட்ஸ் போலில்லாமல், இடிஎஃப்கள் ஒரு பொது பங்காக பங்குச்சந்தையில் வணிகம் மேற்கொள்கின்றன மற்றும் ஒரு இடிஎஃப்-இன் விலை சந்தையில் நடைபெறும் வணிகத்துக்குத் தகுந்தாற்போல் மாற்றம் காண்கின்றது. இடிஎஃப்-இன் வணிக மதிப்பு அது பிரதிநிதித்துவப்படுத்தும் அடிப்படைச் சொத்தின் மொத்த சொத்து மதிப்பைச் சார்ந்து இருக்கும். இடிஎஃப்கள் பொதுவாக இதர மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களை விட அன்றாடம் பணப்புழக்கத்தில் அதிக திறன் மற்றும் குறைந்த கட்டணம் உடையது.

# 29

## செபி குறையுற்றோர் குறைதீர்க்கும் அமைப்பு

செக்யூரிட்டீஸ் சந்தை குறித்து ஏதாவது புகார் இருக்குமானால், நீங்கள் முதலாவதாக அது சம்பந்தபட்ட இடைத்தரகர்கள் அல்லது நிறுவனத்தை தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட இடைத்தரகர் அல்லது நிறுவனம் உங்கள் புகாருக்கான குறை தீர்க்க உதவும். ஒரு வேளை அந்தக் குறை தீர்க்கப்படாமல் இருந்தால், உங்கள் பங்கு தரகர் அல்லது பட்டியலிடப்பட்ட நிறுவனத்துக்கு எதிராக நீங்கள் பங்குச்சந்தை அல்லது டெப்பாசிட்டரியை அணுகலாம்.


அப்போதும் நீங்கள் திருப்தி அடையவில்லை என்றால் ஸ்கோர்ஸ் (செபி புகார் தீர்வு அமைப்பு) என்று அழைக்கப்படும் ஒரு வலைத்தள அடிப்படையிலான குறையுற்றோர் குறைதீர்க்கும் மையத்தின் மூலமாக புகார் அளிக்கலாம். SCORES இணைய முகப்பின் முகவரி : http://scores.gov.in. முதலீட்டாளர்கள் ஆண்ட்ராய்ட் மற்றும் ஐஓஎஸ் தளங்களிலுள்ள ஸ்கோர்ஸ் கைபேசி செயலியை பயன்படுத்தியும் அவர்களது புகார்களை பதிவு செய்யலாம். ஸ்கோர்ஸ் பற்றி மேலும் அதிகம் தெரிந்து கொள்ள நீங்கள் செபியின் கட்டணமில்லா உதவி எண்களை அழைக்கலாம் 1800 22 7575, 1800 266 7575. ஸ்கோர்ஸ் உங்கள் புகாரை பதிவு செய்ய, தொடர மற்றும் புகார்(கள்)ளுக்கான தீர்வு நிலையை இணையத்தில் பின்தொடர எந்த நேரத்திலும், எங்கிருந்தும் மேற்கொள்ள உங்களுக்கு உதவுகிறது.



# 30

## பங்குச்சந்தை முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு

முதலீட்டாளர்களின் கேள்விகளுக்கு தீர்வு காண்பதின் மூலம் முதலீட்டாளர்களின் தேவைகளை முதலீட்டாளர்கள் சேவைகள் பிரிவு பூர்த்திசெய்கிறது, முதலீட்டாளர் புகார்களைத் தீர்த்து வைப்பது மற்றும் தாவாக்களுக்கு பகுதி நீதித்துறை சார்ந்த தீர்வுகளை நடுவர் தீர்ப்பாய நடைமுறைகளின் வழியாக வழங்குகிறது.



பங்குச்சந்தைகள் என்எஸ்இ-யிலுள்ள இன்வெஸ்டார் க்ரீவென்ஸ் ரெசல்யூஷன் பேனல் (ஐஜிஆர்பி) மற்றும் பிஎஸ்இ லிட் மற்றும் எம்எஸ்இ-யிலுள்ள இன்வெஸ்டார் க்ரீவென்ஸ் ரெசல்யூஷன் கமிட்டி (ஐஜிஆர்சி) மூலம் முதலீட்டாளர்களின் குறைகளை தீர்க்க வழிவகுக்கிறது.

முதலீட்டாளர்களுக்கு அவர்களது குறைகளுக்குத் தீர்வு காணும் இந்த வசதிகளை வழங்குவதற்காக, இந்த பங்குச்சந்தைகள் அவர்களின் முதலீட்டாளர்கள் சேவை மையங்களை நாடெங்கிலும் பல்வேறு இடங்களில் கொண்டுள்ளன. இந்த மையங்களின் விரிவான பட்டியல் இந்த பங்குச்சந்தை வலைத்தளங்களில் இருக்கின்றன.

# 31

## நடுவர் தீர்ப்பாய நடைமுறை

நடுவர் தீர்ப்பாயம் என்பது பங்கு தரகர் மற்றும் முதலீட்டாளர்களுக்கிடையேயான தாவாக்களுக்குத் தீர்வு காண மேற்கொள்ளப்படும் பகுதி நீதித்துறை நடைமுறைகளை குறிக்கிறது. ஏதாவது ஒரு தரப்பு அவரின் புகாருக்கு அடுத்த தரப்பு அல்லது பங்கு சந்தையின் புகார் தீர்வு நடைமுறைகள் மூலம் திருப்திகரமாக தீர்வு காணப்படவில்லை என்று நினைக்கும் நிலையில், இருதரப்பினரும் பங்குச்சந்தையிலுள்ள நடுவர் தீர்ப்பாய நடைமுறைகள் வழியைத் தேர்ந்தெடுக்கலாம்.



முதலீட்டாளர் சேவை மையங்கள், நடுவர் தீர்ப்பாய நடைமுறைகள், மற்றும் அதற்கான கட்டணங்கள் செலவுகள் பற்றி மேலும் கூடுதல் தகவல்களுக்கு நீங்கள் சம்பந்தப்பட்ட பங்குச்சந்தை வலைத்தளங்களுக்கு வருகை தரலாம்.

## கோரப்படாத பங்குகள்/ வழங்கப்படாத ஈவுத் தொகைகள் பற்றிய தகவல்கள் - ஐஇபிஎஃப்

முதலீட்டாளரின் விழிப்புணர்வை மேம்படுத்தவும் மற்றும் முதலீட்டாளரின் விருப்பத்தை பாதுகாக்கவும், முதலீட்டாளர் கல்வியறிவு மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎஃப்) நிறுவனச்சட்டம், 2013 பிரிவு 125 இன் கீழ் நிறுவப்பட்டிருக்கிறது. நிறுவனச்சட்டம், 2013 பிரிவு 125 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள விதிகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஐஇபிஎஃப் ஆணையம் என்பது ஒரு சட்டமுறை அமைப்புக்குழு.



தொடர்ந்து ஏழு வருடங்களாக வழங்கப்படாமல் அல்லது கேட்பு எழுப்பப்படாமல் இருக்கும் அனைத்து பங்குத்தொகைகள் மற்றும் பங்குகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால், முதலீட்டாளர் கல்வியறிவு மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎஃப்) க்கு மாற்றப்படும். முதலீட்டாளர் அல்லது அவரது பிரதிநிதிகள் வழங்கப்படாத பங்குத்தொகை மற்றும்/அல்லது கேட்பு எழுப்பப்படாத பங்குகளைப் பெற அவர்களது கேட்பு குறித்து ஐஇபிஎஃப் ஆணையத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும் அதிக தகவல்களுக்கு முதலீட்டாளர்கள் http://www.iepf.gov.in/IEPF/refund.html இணைப்பை பார்வையிடலாம்.

# 32

### இணைப்பு-I
### செக்யூரிட்டீஸ் சந்தையில் முதலீடு செய்ய/வணிகம் செய்யும் போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை

## செய்

- செக்யூரிட்டீஸ் சந்தையில் உங்கள் முதலீட்டுத் தேவைகளுக்கு, செபியில் பதிவு பெற்ற ஒரு முதலீட்டு ஆலோசகரிடம் நீங்கள் ஆலோசனை கேட்கலாம்.
- உங்களது குறிக்கோள் மற்றும் ஆபத்து விருப்பம் சார்ந்து ஒரு திட்டம்/பொருளில் முதலீடு செய்யுங்கள்.
- செல்லத்தக்க ஒப்பந்தக் குறிப்பு/ உறுதிசெய்யப்பட்ட குறிப்பாணை ஒன்றை வணிகம் மேற்கொள்ளப்பட்ட 24 மணி நேரத்திற்குள் அளிக்குமாறு வற்புறுத்துங்கள். உங்கள் டிமேட் கணக்கில் முறையாக உங்கள் பங்குகள் பட்டியலை தொடர்ந்து கண்காணியுங்கள்.
- கையெழுத்திடுவதற்கு முன் அனைத்து ஆவணங்களையும் கவனமாகப் படியுங்கள்.
- உங்கள் கணக்குக்குப் பொருந்தக்கூடிய செலவுகள்/கட்டணங்கள்/தரகு கட்டணம் அனைத்தையும் நீங்கள் கவனமாக பார்க்க வேண்டும் மற்றும் அதன் பதிவுகளை வைத்திருக்க வேண்டும்.
- கையெழுத்திட்ட ஆவணங்கள், கணக்கு அறிக்கைகள், பெற்ற ஒப்பந்த குறிப்புகள் மற்றும் செலுத்திய பணம் ஆகியவற்றின் பதிவேட்டை வைத்திருங்கள்.
- உங்கள் நிதித்தேவை/இலக்கு ஆகியவற்றை முறையாக மதிப்பீடு செய்யுங்கள் மற்றும் இதை நிறைவேற்ற முடியுமா என்பதை உறுதிசெய்வதற்கு போர்ட்ஃபோலியோவை மதிப்பீடு செய்யுங்கள்.
- வங்கி வழியாகவே உங்கள் பணப்பரிவர்த்தனைகளை எப்போதும் மேற்கொள்ளுங்கள், அதாவது ரொக்க பணத்தை பயன்படுத்த வேண்டாம்.
- உங்கள் தகவல்களை எப்போதும் புதுப்பித்து வைத்திருங்கள். உங்கள் முகவரி அல்லது வங்கி விவரங்கள் அல்லது மின்னஞ்சல் அடையாளம் இவற்றில் ஏதாவது மாற்றம் இருந்தால், உங்கள் பங்குத் தரகர்/டெப்பாசிட்டரி பங்கேற்பாளர் ஆகியோருக்கு தகவல் அளியுங்கள். இப்போது சிம் கார்டுகள் பல்வேறு சேவை அளிப்பவர்களுக்கு இணைய முகப்பாக செயல்படுவதால் முதலீட்டாளர்கள் அவர்களது ஒற்றை கைபேசி எண்ணை அவர்களுக்குப் பொருத்தமான கணக்கில் இணைத்துக்கொள்ளலாம். (கைபேசி எண் அனைத்து பரிமாற்றங்களுக்கும் மிக முக்கியமான ஒன்று.)
- உங்களின் அனைத்து முதலீடுகளுக்கும் நியமனத்தை பயன்படுத்திக் கொள்ளுங்கள். டிமேட் கணக்குகளுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட நியமனங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
- உங்கள் தொடர் கணக்கை முறையாக காலவரைப்படி தீர்வு செய்து கொள்ளுங்கள் (நீங்கள் தேர்வு செய்தபடி 30/90 நாட்களுக்கு ஒருமுறை)


- உங்கள் தொடர் கணக்கை முறையாக சரிபார்த்து வாருங்கள்.
- குறிப்பிட்ட காலவரையறையில் உங்கள் வணிகக் கணக்கை சரிபார்த்து மதிப்பீடு செய்து வாருங்கள்.
- அன்றைய தினத்தில் மேற்கொள்ளப்பட்ட வணிகம் குறித்து பங்குச் சந்தையிலிருந்து அனுப்பப்படும் அன்றாட குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்களை முறையாக சரிபார்க்க வேண்டும்.
- வணிக உறுப்பினர் பராமரித்து வரும் முதலீட்டாளர்களின் நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களின் இருப்பு பற்றிய மாதத்துக்கான குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல்களை முறையாக சரிபார்க்க வேண்டும்.

## வேண்டாம்

- முதலீட்டிலிருந்து பணம் கடன் வாங்காதீர்கள்.
- பதிவு பெறாத தரகர்கள் / இதர பதிவு பெறாத இடைத்தரகர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள்.
- ஒப்புக்கொள்ளப்பட்ட தரகுக் கட்டணம்/ இடைத்தரகர் கட்டணங்களை விட கூடுதலாக வழங்காதீர்கள்.
- விதிகள் மற்றும் நிபந்தனைகளை முழுமையாக தெரிந்து கொள்ளாமல் எந்த ஒரு இடைத்தரகரிடமும் எந்த ஒரு ஆவணத்தையும் நிறைவேற்றாதீர்கள்.
- எந்த ஒரு வெற்று படிவத்திலும் அல்லது வழங்கும் அறிவுறுத்தல் சீட்டிலும் கையெழுத்திடாதீர்கள்.
- ஜெனரல் பவர் ஆஃப் ஆட்டர்னி முகவரி சான்று அதிகாரத்தை பங்கு தரகர்/டெப்பாசிட்டரி பங்கேற்பாளர்களுக்கு வழங்காதீர்கள் நீங்கள் ஒரு முகவரி சான்று ஐ வழங்க விரும்பினால், மிக கவனமாக திட்டவட்டமாக குறிப்பிட்ட ஒன்றை வழங்குங்கள்.
- தாவா ஏற்பட்டால், இடைத்தரகர்கள்/பங்குச்சந்தை/செபி ஆகியோருக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய காலவரைக்குள் எழுத்து மூலம் புகார் அளியுங்கள்.
- டப்பா வணிகம் சட்ட விரோதமானது. உங்களுக்கு செலவை மிச்சப்படுத்துவது போல் தோன்றினாலும் டப்பா வணிகத்தில் ஈடுபடாதீர்கள், அது பங்குச் சந்தையைப் போல் பாதுகாப்பாக வணிகம் நிறைவேற்றப்படும் பயனை அளிப்பதில்லை.
- விற்க இயலாத செக்யூரிட்டீஸ்களை விற்க முயன்று கொண்டிருக்கும் ஒரு நபரின் ஆசை வார்த்தைகளை நம்பி உங்களது முதலீட்டு முடிவுகளை எடுக்காதீர்கள். பொய்யான தகவல்களை பரப்புவதும் சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கை, அது பற்றி செபியில் புகார் அளிக்கப்படவேண்டும்.
- இணையவழி கணக்கின் கடவுச்சொல்லை எவரிடமும் பகிர்ந்து கொள்ளாதீர்கள். கடவுச்சொல்லை அடிக்கடி மாற்றிக்கொள்ளுங்கள்.
- பொய்யான கணக்குகளை காட்டி ஏமாற்றும் போன்ஸி திட்டங்கள், பதிவு பெறாத கூட்டு முதலீடுகள் அல்லது பதிவு பெறாத வாய்ப்பு நிதி திட்டங்களுக்கு இரையாகாதீர்கள்.
- உங்கள் கேஒய்சி ஆவணங்களில் காலியிடங்களை அடித்து விட மறக்காதீர்கள்.
- கணினி குறித்த அறிமுகம் அதிகமில்லாதவராயிருந்தால், டிஜிட்டல் ஒப்பந்தங்களை தேர்ந்தெடுக்காதீர்கள்.

33

## இணைப்பு-II
## (முதலீட்டாளர்களின் உரிமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்)




### முதலீட்டாளர்களின் உரிமைகள்

- தனித்துவமான வாடிக்கையாளர் குறியீட்டை தரகரிடமிருந்து ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளுங்கள்.
- இடைத்தரகர்களால் மேற்கொள்ளப்பட்ட கேஒய்சி மற்றும் இதர ஆவணங்களின் ஒரு நகலை பெற்றுக்கொள்ளுங்கள்.
- உங்கள் UCC யிலிருந்து மட்டுமே வணிகத்தை மேற்கொள்ளுங்கள்.
- ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறைகளை பூர்த்தி செய்தால் மட்டுமே உறுப்பினரிடத்தில் கேட்பாணை வழங்குங்கள்.
- சிறந்த விலையை பெறுங்கள்.
- வணிகத்துக்கான ஒப்பந்தக் குறிப்பை நிறைவேற்றுங்கள்.
- விதிக்கப்பட்ட கட்டணங்கள் குறித்த விவரங்களை கேளுங்கள்.
- நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களை குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக்கொள்ளுங்கள்.
- வணிக உறுப்பினரிடத்திலிருந்து கணக்கு அறிக்கையை பெற்றுக் கொள்ளுங்கள்.
- கணக்கை முடித்துவைக்க கோருங்கள்.
- ஒப்புக்கொள்ளப்பட்ட கால அட்டவணைப்படி அறிக்கைகளைப் பெறுங்கள்.

### முதலீட்டாளர்களின் கட்டுப்பாடுகள்

- உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) ஆவணங்களை நிறைவேற்றுங்கள் மற்றும் அதற்கு ஆதரவான ஆவணங்களை அளியுங்கள்.
- வணிக உறுப்பினருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட தன்னிச்சையான நிபந்தனைகளை புரிந்துக் கொள்ளுங்கள்.

- வணிக உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள் பற்றி அறிந்துக் கொள்ளுங்கள்.
- ஆபத்து வெளிப்பாடு ஆவணத்தை படியுங்கள்.
- திட்டம் மற்றும் செயல்பாடு கட்டமைப்பு மற்றும் காலக்கெடு பற்றி அறிந்துக் கொள்ளுங்கள்
- மார்ஜின் தொகையை சரியான நேரத்தில் செலுத்துங்கள்.
- தீர்வுக்கான நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களை சரியான நேரத்தில் செலுத்துங்கள்.
- வணிக விவரங்களை சரிபாருங்கள்.
- நிதி மற்றும் செக்யூரிட்டீஸ்களின் பரிவர்த்தனைகளின் வங்கி மற்றும் டிபி கணக்குகளை சரிபாருங்கள்.
- ஒப்பந்த குறிப்புகள் மற்றும் கணக்கு அறிக்கைகளை மதிப்பீடு செய்யுங்கள்.

# 34

---

**இணைப்பு-III**
**(பதிவு பெறாத முதலீட்டு ஆலோசகர்களுக்கு எதிரான முன்னெச்சரிக்கை)**



பதிவு பெறாத முதலீட்டு ஆலோசகர்கள் பற்றிய எச்சரிக்கை

செபி (முதலீட்டு ஆலோசகர்கள்) ஒழுங்குமுறை, 2013 [ஜூலை 03, 2020 அன்று இறுதியாக திருத்தப்பட்டது) இன் கீழ் செபி பதிவுபெற்ற முதலீட்டு ஆலோசகர்கள் "முதலீட்டு ஆலோசகர்" என்பவர் வாடிக்கையாளர்கள் அல்லது பிற நபர்கள் அல்லது நபர்களின் குழு போன்றவர்களுக்கு முதலீட்டு ஆலோசனைகளை வழங்கும் வணிகத்தில் பயன் கருதி ஈடுபட்டுள்ள எந்த ஒரு நபரும் மற்றும் ஒரு முதலீட்டு ஆலோசகராக எந்த ஒரு பெயரிலும் தன்னை முன்னிறுத்திக்கொள்ளும் எந்தவொரு நபரையும் உள்ளடக்கியது.

"முதலீட்டு ஆலோசனை"யை" ஒழுங்குமுறைப்படுத்தும் நோக்கத்தை இந்த ஒழுங்குமுறை குறிக்கோளாகக் கொண்டுள்ளது, இது குறிப்பிடுவது, முதலீடு செய்தல், வாங்குவது, விற்பது அல்லது செக்யூரிட்டீஸ் அல்லது முதலீட்டுத் திட்டங்களை கையாள்வது குறித்த ஆலோசனை மற்றும் முதலீட்டு உடைமைப்பட்டியலின் உள்ளடக்கமாக உள்ள செக்யூரிட்டீஸ்கள் அல்லது முதலீட்டு திட்டங்கள் பற்றி எழுத்து, வாய்மொழி அல்லது வேறு எந்த ஒரு தொடர்பு வகை மூலமாகவும் வாடிக்கையாளருக்கான பயன் குறித்து ஆலோசனை வழங்குதல், அத்தோடு நிதித்திட்டமிடுதல் உட்பட்டவற்றைக் குறிக்கும். இருந்தபோதிலும், பொதுமக்களுக்கு பரவலாகக் கிடைக்கக்கூடிய, செய்தித் தாள், பத்திரிகைகள், எந்தவொரு மின்னணு அல்லது ஒளிபரப்பு அல்லது தொலைத்தொடர்பு ஊடகம் மூலமாக வழங்கப்படும் முதலீட்டு ஆலோசனைகள், இந்த ஒழுங்குமுறைகளின் கீழ் முதலீட்டு ஆலோசனையாக கருதப்படாது. முதலீட்டு ஆலோசகர்கள் செபியிடமிருந்து பதிவு பெற்று நன்னடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.

செபியில் பதிவு செய்யாமல் முதலீட்டு ஆலோசகராக செயல்படுவது சட்டவிரோதமானது. இதுபோன்ற சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுக்க செபி

ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சில நேர்மையற்ற மற்றும் அறியாத நிறுவனங்கள் தங்களை பதிவு செய்துகொள்ளாமல் இருக்கலாம் அல்லது, நன்நடத்தை விதிகளை பின்பற்றாமல் இருக்கலாம். முதலீட்டு ஆலோசகர்கள் அறிவுரை வழங்குவதோடு தங்களைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும், அவர்கள் பணம் அல்லது செக்யூரிட்டீஸ்களை கையாளக் கூடாது.

முதலீட்டு ஆலோசகர்களாக (ஐஏ) செயல்படும் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து செபிக்கு புகார் அளிக்கப்பட்ட சில முறைகேடான செயல்பாடுகள் பின்வருவனவற்றில் அடங்கியுள்ளது:

- உறுதி செய்யப்பட்ட வருமானத்தை அளிப்பதாக முதலீட்டு ஆலோசகர்கள் வாடிக்கையாளர்களிடம் தெரிவிக்கிறார்கள்.
- பெரும் இலாபத்தை அடையலாம் என்ற தவறான வாக்குறுதியுடன் வாடிக்கையாளரிடமிருந்து அதிகப்படியான கட்டணங்களை வசூலித்தல்.
- அதிகக் கட்டணம் சம்பாதிக்க வாடிக்கையாளரின் ஆபத்து சுயவிவரத்தை பின்பற்றாமல் தவறாக விற்பனையில் ஐஏ ஈடுபடுவது. இழப்பு ஏற்ப்படுத்தியதற்காக கட்டணங்களைத் திரும்பக் கேட்டு புகார் செய்யும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் இழப்புகளை மீட்டெடுக்கக் கூடியது என்று வாக்குறுதி அளித்து அதிக ஆபத்துள்ள திட்டங்களை முதலீட்டு ஆலோசகர் வழங்குவது.
- வாடிக்கையாளர்கள் சார்பாக வணிகம் நடத்துவது.
- வாடிக்கையாளர் சுயவிவரத்துடன் பொருந்தாத மற்றும் வாடிக்கையாளரின் ஒப்புதல் இல்லாமல் சேவையை தன்னிச்சையாக புத்தாக்கம் செய்தல் அல்லது அதிக ஆபத்து நிறைந்த திட்டங்களுக்கு மாற்றுவது,
- வாடிக்கையாளர்களுக்கு பண இழப்பை ஏற்படுத்தும் வகையிலான ஐஏயின் மோசமான சேவைகள். - திரும்பப்பெறுவது தொடர்பான பிரச்சினைகள்

ஆகவே முதலீட்டாளர்கள் கண்காணிப்புடன் இருந்து மேலே கூறப்பட்ட, தற்போது சந்தையில் நிலவும் நடவடிக்கைகளிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும் மற்றும் மூலதனச் சந்தைகளில் தங்களை திறமை வாய்ந்தவர்களாக கூறிக்கொள்ளும் நிறுவனங்களிடம் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொள்ளவேண்டும். செபி (முதலீட்டு ஆலோசகர்கள்) ஒழுங்குமுறை, 2013 [ஜூலை 03, 2020 அன்று இறுதியாக திருத்தப்பட்டது) இன் கீழ் செபி பதிவுபெற்ற முதலீட்டு நிறுவனங்களிடமிருந்து மட்டுமே ஆலோசனைகளைப் பெறுமாறு முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.
அம்மாதிரியான நிறுவனங்களின் பட்டியல் கீழ் காணும் வலைத்தளத்தில் உள்ளது: https://www.sebi.gov.in.
முதலீட்டு ஆலோசகர்களோடு தொடர்பிலிருக்கும் போது செய்யக்கூடியவை மற்றும் செய்யக்கூடாதவை.

| செய்யக்கூடியவை | செய்யக்கூடாதவை |
|---|---|
| எப்போதும் செபி பதிவுபெற்ற முதலீட்டு ஆலோசகர்களோடு மட்டுமே தொடர்பு வைத்துக்கொள்ளுங்கள். | பதிவு பெறாத நிறுவனங்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளாதீர்கள். |
| செபி பதிவு எண்ணை சரிபாருங்கள். செபி பதிவு பெற்ற அனைத்து முதலீட்டு ஆலோசகர்களின் பட்டியல் செபி | முதலீட்டு ஆலோசனை என்ற பெயரில் பங்குச்சந்தை நிலவர உதவிக் குறிப்பைக் கேட்டு ஏமாந்துவிடாதீர்கள். |

| | |
|---|---|
| வலைத்தளத்தில்உள்ளது (https://www.sebi.gov.in) | முதலீடு செய்வதற்காக உங்கள் பணத்தை முதலீட்டு ஆலோசகரிடம் கொடுக்காதீர்கள். |
| முதலீட்டு ஆலோசகரிடம் செல்லத்தக்க பதிவு சான்றிதழ் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். | உறுதியான இலாபத்தைத் திரும்பப்பெறும் வாக்குறுதிகளை நம்பாதீர்கள். |
| உங்கள் முதலீட்டு ஆலோசகரிடம் ஆலோசனைக்கான கட்டணத்தை மட்டுமே செலுத்துங்கள். | முதலீடு செய்ய முடிவெடுக்கும் போது விவேகத்தை மீறி பேராசைக்கு இடம் கொடுத்துவிடாதீர்கள். |
| ஆலோசனைக்கான கட்டணங்களை வங்கி மூலம் மட்டுமே செலுத்துங்கள் மற்றும் முறையாக கையெழுத்திடப்பட்ட, நீங்கள் செலுத்திய கட்டண விவரங்கள் அடங்கிய இரசீதுகளை பராமரியுங்கள். | ஆர்வத்தைத் தூண்டும் விளம்பரங்கள் அல்லது சந்தை வதந்திகளை நம்பி மயங்கி விடாதீர்கள் |
| முதலீட்டு ஆலோசனைகளை ஏற்பதற்கு முன் எப்போதும் உங்கள் ஆபத்து விவரங்களை கேளுங்கள். | எந்த ஒரு முதலீட்டு ஆலோசகர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் வாயிலாக, தொலைபேசி அழைப்பு அல்லது செய்தி அனுப்புதல் ஆகியவற்றின் வழியாக மட்டுமே பரிவர்த்தனை மேற்கொள்ளுவதை தவிருங்கள். |
| உங்கள் ஆபத்து சுயவிவரத்தின் அடிப்படையில் மட்டுமே ஆலோசனை வழங்குமாறும் மற்றும் முதலீட்டுக்கான இதர திட்டங்களையும் கருத்தில் கொள்ளுமாறு முதலீட்டு ஆலோசகரிடம் கண்டிப்பாகச் சொல்லுங்கள். | முதலீட்டு ஆலோசகர்கள் திரும்பத்திரும்ப செய்திகள் அனுப்பியது மற்றும் அழைப்பு விடுத்த காரணத்திற்காக மட்டுமே முடிவுகளை எடுக்காதீர்கள். |
| ஆலோசனை குறித்து மேல் நடவடிக்கை எடுப்பதற்கு முன் உங்கள் முதலீட்டு ஆலோசகரிடம் பொருத்தமான கேள்விகளைக் கேட்டு உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள். | முதலீட்டு ஆலோசகர்கள் அளிக்கும் குறைந்த கால தள்ளுபடி அல்லது இதர ஊக்கத் தொகைகள், பரிசுகள் போன்றவற்றுக்கு இரையாகாதீர்கள். |
| ஆபத்தை மதிப்பீடு செய்யுங்கள்—அந்த முதலீட்டின் வருமான விவரம் அத்துடன் செலாவணியாகும் தன்மை மற்றும் பாதுகாப்புக் கூறுகள் ஆகியவற்றை முதலீடு செய்யும் முன் மதிப்பீடு செய்யுங்கள். | உங்கள் ஆபத்து நட்டம் மற்றும் முதலீட்டு இலக்குகளுக்கு ஒத்துவராத முதலீட்டைச் செய்வதில் அவசரம் காட்டாதீர்கள். |
| எழுத்து மூலம், முறையாக கையெழுத்திட்டு அச்சுப்பதித்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை வற்புறுத்திப் பெறுங்கள். முதலீட்டு ஆலோசகரிடம் செயல்படத் துவங்கும் முன்பாக விதிகள் மற்றும் நிபந்தனைகளை, குறிப்பாக ஆலோசனை கட்டணங்கள், ஆலோசனை திட்டங்கள், பரிந்துரைத்த வகைகள் போன்றவற்றை கவனமாக படியுங்கள் | |

| | |
|---|---|
| உங்கள் பரிவர்த்தனைகளில் கண்காணிப்போடு இருங்கள் | |
| உங்கள் சந்தேகங்கள்/குறைகளை தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடுங்கள் | |
| முதலீட்டு ஆலோசகர்கள் உத்திரவாதமளிக்கப்பட்ட அல்லது உறுதிசெய்யப்பட்ட வருமானத்தை வழங்குவதாக சொன்னால் செபிக்கு தகவல் அளியுங்கள். | |

# 35

**இணைப்பு-IV**
**(ஏஎஸ்பிஏ மூலம் யூனிஃபைட் பேமெண்ட் இண்டர்ஃபேஸ் (யுபிஐ)**

இப்போது ஐபிஓக்களில் யூனிஃபைட் பேமெண்ட் இண்டர்ஃபேஸை (யுபிஐ) பணம் செலுத்தும் வழி முறையாக இப்போது முதலீட்டாளர்கள் பயன்படுத்தலாம். யுபிஐ என்பது பல வங்கி அம்சங்களை ஒன்றிணைத்து, தடையற்ற நிதி பரிமாற்றங்கள் மற்றும் வணிக கட்டண செலுத்தல்கள் ஆகியவற்றை ஒரே இயக்க முறையாக கொண்டு பல வங்கிக் கணக்குகளை ஒரே மொபைல் செயலியில் (பங்கேற்கும் எந்தவொரு வங்கியுடையதும்), இயக்கும் ஒரு அமைப்பு.

யுபிஐ யை பயன்படுத்தி எவ்வாறு முதலீடு செய்வது:
யுபிஐ மூலம் ஐபிஓவில் முதலீடு செய்யும் நடைமுறை கீழே குறிப்பிட்ட 3 முக்கிய படிநிலைகளைக் கொண்டது:

**ஏ**

யுபிஐ வழியாக விலை கேட்டல்: வாடிக்கையாளர்கள் விலை கேட்டால் விவரங்களை அவர்களது யுபிஐ ஐடி யோடு சேர்த்து விண்ணப்ப படிவத்தில் பூர்த்தி செய்யவேண்டும். விண்ணப்பங்கள் இடைத்தரகர்களிடம் சமர்ப்பிக்கலாம் அவர்கள் அந்த விலை கேட்பு விவரங்களை யுபிஐ ஐடியோடு சேர்த்து பங்குச் சந்தை விலை கேட்பு தளத்தில் பதிவேற்றம் செய்வார். பங்குச்சந்தை மின்னியல் முறையில் விலை கேட்பு விவரங்களை முதலீட்டாளரின் யுபிஐ ஐடி-யை சேர்த்து, வழங்கும் வங்கியால் நியமிக்கப்பட்ட மூன்றாம் தரப்பு (எஸ்க்ரோ) /ஆதரவாளர் வங்கியோடு பகிர்ந்துக் கொள்ளும்.

**பி**

நிதியை முடக்குதல்: மூன்றாம் தரப்பு (எஸ்க்ரோ) /ஆதரவாளர் வங்கி விண்ணப்பிக்கப்பட்ட தொகை மற்றும் அதைத் தொடர்ந்து ஒருவேளை ஒதுக்கீடு செய்யப்பட்டால், தேவைப்படும் நிதியை பிடித்தம் செய்ய முதலீட்டாளரிடம் நிதி முடக்கத்துக்கான அதிகாரத்தை வழங்குமாறு கேட்கும். முடக்க வேண்டுகோள் முதலீட்டாளரால் நிறைவேற்றப்பட்டவுடன் அந்த நிதி முதலீட்டாளரின் கணக்கில் முடக்கப்பட்டுவிடும் மற்றும் அதுபற்றி முதலீட்டாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

சி

ஒதுக்கீட்டு நடைமுறைகளுக்குப் பின் பங்குகளுக்கு செலுத்த வேண்டிய தொகை: பங்குகள் ஒதுக்கப்பட்டவுடன், முதலீட்டாளரின் கணக்கிலிருந்து நிதியை பிடித்துக்கொள்ளும் நடைமுறை மேற்கொள்ளப்படும் மற்றும் கூடுதல் தொகை முடக்கத்திலிருந்து விடுவிக்கப்படும். இந்த நடைமுறை முதலீட்டாளரால் வழங்கப்பட அதிகாரத்தின் அடிப்படையில் அல்லது நிதியை முடக்கிய நேரத்தில் பயன்படுத்தப்பட்ட யுபிஐ (பின்) அடையாள எண் கொண்டு நிறைவேற்றப்படும்.

ஐபிஓவில் முதலீடு செய்ய யுபிஐ ஐ பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளவேண்டிய குறிப்புக்கள்:

- செபி வலைத்தளத்தில் உள்ள சுய சான்றளிக்கப்பட்ட சிண்டிகேட் வங்கிகளின் பட்டியலில் (எஸ்.சி.எஸ்.பி) ஒரு வழங்கும் வங்கியாக செயல்பட தகுதிபெற்ற குறிப்பிடப்பட்ட ஒரு வங்கியுடன் உங்கள் யுபிஐ ஐடியை உருவாக்கவும்.
- கைபேசி செயலிகள் மற்றும் யுபிஐக்களை மட்டுமே பயன்படுத்துங்கள்- செபி வலைத்தளத்தில் உள்ள பொது வெளியீடுகளில் பயன்படுத்துவதற்கான கைபேசி செயலிகளின் பட்டியலில் உள்ளவை
- உங்கள் விண்ணப்ப படிவங்களை யுபிஐயை ஒரு கட்டணம் செலுத்தும் முறையாக கொண்டு ஒரு சிண்டிகேட் உறுப்பினர், அல்லது பதிவு பெற்ற பங்கு தரகர் அல்லது ஒரு பதிவாளர் மற்றும் பரிமாற்ற முகவர் அல்லது ஒரு டெப்பாசிட்டரி பங்கேற்பாளர் ஆகியோரிடம் மட்டுமே சமர்ப்பிக்கவும்.
- யுபிஐ யில் ஐபிஓ விண்ணப்பத்திற்கான வரம்பு ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.2 லட்சம் மற்றும் இது சில்லறை வணிக தனிநபர் முதலீட்டாளர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.
- மூன்றாம் தரப்பு யுபிஐ ஐடி அல்லது மூன்றாம் தரப்பு வங்கிக் கணக்கைப் பயன்படுத்தும் முதலீட்டாளர்கள் ஒதுக்கீட்டிற்கு கணக்கில் கொள்ளப்பட மாட்டார்கள்.

# 36

## இணைப்பு-V
## அருஞ்சொல்

| வரிசை எண் | சுருக்கம் | முழு வடிவம் |
|---|---|---|
| 1 | ஏஎம்சி | ஆண்டு பராமரிப்புக் கட்டணம் (ஏஎம்சி) |
| 2 | ஏஎஸ்பிஏ | முடக்கப்பட்ட தொகை ஆதரவுடன் விண்ணப்பம் (ஏஎஸ்பிஏ) |
| 3 | பிஎஸ்இ | பிஎஸ்இ லிமிடெட் |
| 4 | பிஎஸ்டிஏ | அடிப்படை சேவைகள் டிமேட் கணக்கு (பிஎஸ்டிஏ) |
| 5 | சிஏஎஸ் | தொகுக்கப்பட்ட கணக்கு அறிக்கை (சிஏஎஸ்) |
| 6 | சிடிஎஸ்எல் | சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்வீஸஸ் (இந்தியா) லிமிடெட் |
| 7 | டிமேட் | டிமெட்டீரியலைஸ்டு |
| 8 | டிபி | டெப்பாசிட்டரி பார்ட்டிசிபன்ட் (டிபி) |
| 9 | ஐஏ | முதலீட்டு ஆலோசகர்கள் |
| 10 | ஐஜிஆர்சி | இன்வெஸ்டார் க்ரீவென்ஸ் ரெசல்யூஷன் கமிட்டி (ஐஜிஆர்சி) |
| 11 | ஐ.ஜிஆர்பி | இன்வெஸ்டார் க்ரீவென்ஸ் ரெசல்யூஷன் பேனல் (ஐ.ஜிஆர்பி) |
| 12 | ஐ.பி.ஓ | ஆரம்ப பொது வெளியீடு |
| 13 | கேஜஎன் | கேஒய்சி அடையாள எண் |

| | | |
|---|---|---|
| 14 | கேஒய்சி | உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துகொள்ளுங்கள் |
| 15 | எம்ஐஐ | மார்க்கெட் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் இண்டர்மீடியரீஸ் |
| 16 | எம்எஸ்இ | மெட்ரோபாலிட்டன் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆஃப் இந்தியா லிமிடெட் |
| 17 | என்எஸ்டிஎல் | நேஷனல் செக்யூரிட்டீஸ் டெப்பாசிட்டரி லிமிடெட் |
| 18 | என்எஸ்இ | நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆப் இந்தியா லிட் |
| 19 | பிஏஎன் | நிரந்தர கணக்கு எண் |
| 20 | பிஓஏ | உரிமை வழங்கல் ஆவணம் (பவர் ஆப் அட்டர்னி) |
| 21 | ஸ்கோர்ஸ் | செபி குறையுற்றோர் குறைதீர்க்கும் அமைப்பு |
| 22 | செபி | செக்யூரிட்டீஸ் மற்றும் எக்ஸ்சேஞ் போர்ட் ஆஃப் இந்தியா |
| 23 | எஸ்எம்எஸ் | குறுந்தகவல் சேவை |
| 24 | யுசிசி | யுனிக் கிளையண்ட் கோட் |
| 25 | யுஐடி | யுனிக் ஐடெண்ட்டிஃபிகேஷன் |

**செபியின் முதலீட்டாளர் விழிப்புணர்வு முன்னெடுப்புக்கள்**

- **ரிசோர்ஸ் பர்சன்ஸ் ப்ரோக்ரேம்ஸ்:**
  செபியால் தெரிவு செய்யப்பட்டு பட்டியலிடப்பட்ட ரிசோர்ஸ் பர்சன்ஸால் அடுக்கு II/அடுக்கு III நகரங்கள் / ஊர்களில் மற்றும் அவர்களது மொழிகளில் பதவி ஓய்வு பெற்ற நபர்கள், இல்லத்தரசிகள், சுய உதவி குழுக்கள், பணியிலிருக்கும் செயலதிகாரிகள் போன்றவர்களை குறியிலக்காகக் கொண்டு நடத்தப்படும் நிதிக் கல்வித்திட்டங்கள்.

- **செபி திட்டங்களுக்கு வருகை:**
  இந்த திட்டங்களுக்காக செபி அலுவலகங்களுக்கு வருகை தரும் கல்லூரி, பள்ளிகள் மற்றும் தொழில்முறை நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதலீட்டாளர் விழிப்புணர்வு ப்ரோக்ராம் நடத்தப்படுகின்றன.

- **பிராந்திய கருத்தரங்குகள்:**
  பங்குச்சந்தைகள் டெப்பாசிட்டரீஸ், ஏ.எம்.எஃப்.ஐ, கம்மாடிட்டீஸ் டெரிவேட்டிவ்ஸ் எக்ஸ்சேஞ்ஜஸ் போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செபி நடத்தும் முதலீட்டாளர்கள் கல்வித் திட்டங்கள்.

- **முதலீட்டாளர்கள் சங்கத்தின் (ஐஏக்கள்) மூலம் நடத்தப்படும் முதலீட்டாளர் விழிப்புணர்வுத் திட்டங்கள்:**
  செபியால் அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் சங்கத்தினால் (ஐஏக்கள்) அடுக்கு II/அடுக்குIII நகரங்கள்/ஊர்களில் நடத்தப்படும் செக்யூரிட்டீஸ் சந்தை பற்றிய முதலீட்டாளர்கள் கல்வி திட்டங்கள்.

- **கம்மாடிட்டீஸ் டெரிவேட்டிவ்ஸ் டிரெய்னர்கள் (சிஓ டிக்கள்) மூலமாக முதலீட்டாளர்கள் கல்வி திட்டங்கள்:**
  செபியால் அங்கீகரிக்கப்பட்ட கம்மாடிட்டீஸ் டெரிவேட்டிவ்ஸ் ட்ரெய்னர்கள் (சிஓ டிக்கள்) அடுக்கு II/அடுக்குIII நகரங்கள்/ஊர்களில் நடத்தும் கம்மாடிட்டீஸ் டெரிவேட்டிவ்ஸ் பற்றிய முதலீட்டாளர்கள் கல்வி திட்டங்கள்.

- **செக்யூரிட்டீஸ் சந்தை பயிற்சியாளர்கள் மூலமாக நடத்தப்படும் முதலீட்டாளர்கள் கல்வி திட்டங்கள்**

  செபியால் அங்கீகரிக்கப்பட்ட செக்யூரிட்டீஸ் சந்தை பயிற்சியாளர்கள் அடுக்கு II/அடுக்குIII நகரங்கள்/ஊர்களில் நடத்தும் செக்யூரிட்டீஸ் சந்தை பற்றிய முதலீட்டாளர்கள் கல்வி திட்டங்கள்.

  இந்த முதலீட்டாளர்கள் விழிப்புணர்வு திட்டங்கள் பற்றிய விவரங்கள் செபி முதலீட்டாளர் வலைத்தளத்தில் காணலாம். http://investor.sebi.gov.in

**இணையவழி வள ஆதாரங்கள் கீழ்காணும் வலைத்தளங்களில் இருக்கின்றன:**

| | |
|---|---|
| வலைத்தளம்: | www.sebi.gov.in |
| முதலீட்டாளர் வலைத்தளம் : | http://investor.sebi.gov.in |
| வலைத்தளம்: | www.bseindia.com |
| வலைத்தளம்: | www.nseindia.com |
| வலைத்தளம்: | www.nsdl.co.in |
| வலைத்தளம்: | www.cdslindia.com |
| வலைத்தளம்: | www.msei.in |

செக்யூரிட்டீஸ் அண்டு எக்ஸ்ச்சேஞ் போர்டு ஆப் இந்தியா,
செபி பவன்
பிளாட் எண் சி4-ஏ 'ஜி'பிளாக், பாந்த்ரா குர்லா காம்ப்ளெக்ஸ்,
பாந்த்ரா (கிழக்கு), மும்பை - 400 051
தொலைபேசி: +91-22-26449000 / 40459000 l வலைத்தளம்: www.sebi.gov.in
முதலீட்டாளர் வலைத்தளம்: http://investor.sebi.gov.in

இண்ட்டராக்டிவ் வாய்ஸ் ரெஸ்பான்ஸ் சிஸ்டம் (ஐவிஆர்எஸ்)
தொலைபேசி: +91-22-26449950 / 40459950 கட்டணமில்லா
முதலீட்டாளர் ஹெல்ப்லைன்: 1800 22 7575 மற்றும் 1800 266 7575
முதலீட்டாளர் புகார்களுக்கு: https://scores.gov.in

பிஎஸ்இ லிட்
25 ஆவது மாடி, பிஜே டவர்ஸ், தலால் ஸ்ட்ரீட், ஃபோர்ட்,
மும்பை - 400 001.
தொலைபேசி: 022 22721233/34
வலைத்தளம் : www.bseindia.com மின்னஞ்சல் ஐடி: is@bseindia.com

நேஷனல் செக்யூரிட்டீஸ் டெப்பாசிட்டரிலிமிட்டெட்
டிரேட் ஒர்ல்ட், ஏவிங், 4&5 ஆவது மாடி, கமலா மில்ஸ்
காம்பவுண்டு, லோயர் பரேல் மும்பை 400 013
தொலைபேசி: (022) 2499 4200 | தொலைநகல்: (022) 2497 6351
முதலீட்டாளர் உதவி அழைப்பு எண் 1800 1020 990 / 1800 224 430
வலைத்தளம்: www.nsdl.co.in

நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ் ஆப் இந்தியா லிட்
எக்ஸ்சேஞ் பிளாசா சி-1 பிளாக் ஜி, பாந்த்ரா குர்லா
காம்ப்ளெக்ஸ் பாந்த்ரா(கி), மும்பை-400 051
தொலைபேசி எண்: (022) 26598100 - 8114
தொலைநகல் எண்: (022) 26598120

மெட்ரோபொலிட்டன் பங்குச்சந்தை இந்தியா லிமிட்டெட்
205 ஏ, 2 வது மாடி, பிரமால் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க்,
சுந்தர் பங்க் லேன், கமானி சந்திப்பு,
எல்.பி.எஸ் சாலை, குர்லா-மேற்கு, மும்பை-400070
தொலைபேசி எண்: (022) 26598100 - 8114
தொலைநகல் எண்: (022) 26598120

சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா)லிமிட்டெட்
மராத்தான் ஃப்யூச்சரெக்ஸ், ஏ-விங்,25 ஆவது மாடி, மாபாத்லால் மில்ஸ் காம்பவுண்ட்
என்.எம்.ஜோஷி மார்க், லோயர் பரேல்,(கி) மும்பை 400 013.
கட்டணமில்லா ஹெல்ப்லைன்: 1800-200-5533
வலைத்தளம் : www.cdslindia.com

இலவச சுழற்சி வினியோகத்திற்காக